REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

மின்னிதழ்

2024 ஒக்டோபர் 5 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 ANNIVERSARY

தினகரன்

வரு. 92 இல. 238 | Saturday 05, October, 2024 | 13பக்கங்கள் | 50/-


## தங்கத்தின் விலை திடீர் மாற்றம் 22 கரட் பவுண் 193,000 ரூபா



நாட்டில் கடந்த சில மாதங்களாக சற்று ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்ட தங்கத்தின் விலை நேற்று முன்தினம் (03) குறைவடைந்தபோதும் நேற்று (04) மீண்டும் அதிகரித்துள்ளது. நேற்றை நிலவரத்தின் படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலையானது

06

### இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு

# இந்தியா முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்



### ஜனாதிபதி அநுரவுடனான சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவிப்பு

- இந்தியாவின் பாரிய சந்தை வாய்ப்பை பயன்படுத்திக்-கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டு
- பிரதமர் மோடியின் அழைப்பிதழும் ஜனாதிபதியிடம் கையளிப்பு




ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாட்டுக்கு வருகைதந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று (04) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பதவிக் காலம் ஆரம்பிக்கும் தருவாயில் இந்நாட்டுக்கு

06

### IMF நீடிக்கப்பட்ட கடன் திட்டம்

## 03ஆவது மீளாய்வு காலம் சில தினங்களுக்குள்



சர்வதேச நாணய நிதியத்துடன் அமுல்படுத்தப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் திட்டத்தின் மூன்றாவது மீளாய்வுக்கான காலம் அடுத்த சில தினங்களுக்குள் அறிவிக்கப்படுமென சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்பு துறையின் பணிப்பாளர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீனிவாசன் தலைமையிலான உயர்மட்டக் குழு, தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதுடன், இவர்கள் ஜனாதிபதி மற்றும் அவரது புதிய பொருளாதார குழுவை சந்தித்துள்ளனர்.

பிரதிநிதிகள் குழு அதிகாரிகளுடன் சமீபத்திய பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் அவர்களின் பொருளாதார சீர்திருத்த நோக்கங்கள் குறித்து இவர்கள் கலந்துரையாடியுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புதுறையின் பணிப்பாளர் ஜூலி கோசாக் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனை தெரிவித்த அவர்,

இந்தத் திட்டத்தின் கீழ் மூன்றாவது மதிப்பாய்வின் திகதிகள் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும். தூதுக்குழுவினரின் வருகைக்குப் பின்னர் இது தொடர்பாக அறிவிக்கப்படும் எனவும் நிகழ்ச்சியின் செயற்றிறன் வலுவாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுப்பது, பணவீக்கத்தைக்

06

## அழைப்பை ஏற்றார் ஜனாதிபதி; விரைவில் புதுடில்லி பயணம்

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் தனது முதலாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயமாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு பயணம் செய்ய திட்டமிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று (04) இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கருடன் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பில், இந்திய விஜயம் தொடர்பான உத்தியோகபூர்வ அழைப்பு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், அந்த அழைப்பை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஏற்றுக்கொண்டுள்ளார். இந்தியப் பிரதமர் நரேந்திர

06

## கேள்விக்குறியாகியுள்ள எதிர்கால தமிழ் தேசிய அரசியல்

### த.வி.கூட்டணியின் தலைவர் சாடல்



தமிழ்த் தேசிய அரசியல் இன்று ஒரு கேள்விக்குறியாகியுள்ளதாகவும் தமிழரின் வாக்கு சிதைவடையும் நிலை காணப்பட்டால் தமிழரின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடுமெனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அருண் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (04) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அவர், தமிழ் தேசிய இனத்தின் அரசியல் ஒரு பேராபத்தான நிலைக்கு

06

## 04 வயது குறிஞ்சாக்கேணி சிறுவன் உலக சாதனை



பிரிட்டனை தலைமையகமாகக் கொண்ட *Worldwide Book of Records* நிறுவனத்தினால் உலக சாதனையாளர்களை இனம் காண்பதற்கான போட்டியில் புதிய உலக சாதனையாளராக, குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த 04 வயது நஸ்மி அக்யுளான் பிலால் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டுள்ளார்.

பத்தின் 100 ஆம் அடுக்கு வரை அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் 02 நிமிடம் 12 வினாடிகளில் கூறி இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

அவரது பெற்றோர் கந்தளாய் வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் (*Physiotherapist*) நஸார் முஹமட் நஸ்மி மற்றும் கிண்ணியா வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் (*Physiotherapist*) அஸ்ரப் பாத்திமா பஸீஹா என்பது குறிப்பிடத்தக்கது.

### IMF இன் இலக்குகளை அடைவதுடன்

## மக்கள் மீதான அழுத்தத்தை குறைக்க மாற்று தீர்வுகள் குறித்து அரசு கவனம்

### IMF சிரேஷ்ட தூதுக்குழுவினரிடம் ஜனாதிபதி உறுதி



சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் வகையில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையிலான இரண்டாம் நாள்

06

**நேற்று இரண்டாம் நாளாகவும் பேச்சு**

### இன்ஃப்ளுவன்ஸா பரவல் அதிகரிப்பு

## குழந்தைகளுக்கு முகக்கவசம் அணிவிப்பது பாதுகாப்பானது

### தீபால் பெரேரா



நாட்டில், இந்நாட்களில் இன்ஃப்ளுவன்ஸா நோய் அறிகுறிகள் உள்ள குழந்தைள் அதிகம் பதிவாகி வருவதனால், குழந்தைகளுக்கு முகக்கவசத்தை அணிவிக்குமாறு, சுகாதாரப் பிரிவின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா பெற்றோரை வலியுறுத்தியுள்ளார்.

06

### ஸ்ரீலங்கன் பெறுகை ஒப்பந்தம்:

## விசாரணைகள் நடத்த CIDக்கு கொழும்பு நீதவான் உத்தரவு



ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் பரிவர்த்தனைகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய கணினி தரவுகள் நீக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள

06

## ஐ.தே.க.–ஐ.ம.ச. கூட்டணி முயற்சி கட்சி தலைவரின் தலையீட்டால் முறிவு

### இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குமிடையிலான ஆரம்ப பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்த போதிலும், பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத் தலைவர் அந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டதன் மூலம் கூட்டணிக்கான பணிகள் முடங்கியதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

06

## இலங்கைக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும்



சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஆதரவளிக்கவேண்டுமென எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு இரு வாரங்களில், நேரத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகவும் அவர் இராஜதந்திரத்தை சரியாகப் புரிந்துகொண்டு செயற்பட்டுள்ளதாகவும் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு இந்தியா மிக முக்கியமானதென்ற சமிக்ஞையை சரியாக புரிந்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார, முதலில் இந்திய உயர்ஸ்தானிகருடனான

06

## முன்னாள் அமைச்சர் பந்துல அரசியலிலிருந்து ஓய்வு

### தேர்தலிலும் போட்டியிடப்போவதில்லையென அறிவிப்பு



பொதுத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லையென முன்னாள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று (04) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது, இருபது வருடங்களுக்கு மேல் ஹோமாகம தொகுதியை தாம் பிரதிநிதித்துவப்படுத்தியதாகவும் இக் காலப்பகுதியில்,

06

### பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு

## இலங்கை தமிழரசுக் கட்சி விரும்பினால் ஜ.த.தே. கூட்டணியுடன் இணையலாம்

### சுரேஷ் பிரேமச்சந்திரன்



இலங்கை தமிழரசு கட்சி விரும்பினால் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட முடியுமென ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ். நகரில் ஊடகங்களை சந்தித்தபோதே இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன்

06

### பொது தேர்தலில் இ.தொ.கா நிலைப்பாடு

## கட்சியின் தேசிய சபையில் கலந்துரையாடிய பின் முடிவு

### ஜீவன் தொண்டமான்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான இறுதித் தீர்மானம் கட்சியின் தேசிய சபையில் கலந்துரையாடிய பின்னரே அறிவிக்கப்படுமென கட்சியின்

06

## இன்னும் இரண்டு வாரங்களில் பொருட்களின் விலை குறைப்பு

### வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு நம்பிக்கை



நாட்டில் எதிர்வரும் இரண்டு வாரங்களில் பொருட்களின் விலை குறைவடைவதற்கான வாய்ப்புள்ளதாக தகவல்கள்

06

## நகர்வலம்

# வெளியீட்டு உதவித் திட்டத்துக்கான கையெழுத்துப் பிரதிகள் ஏற்பு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மூலம் செயற்படுத்தப்படும் வெளியீடு உதவித் திட்டம் 2025 இற்கான கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளல் செப்டெம்பர் முதலாம் திகதி முதல் 2024 டிசம்பர் 15 ஆம் திகதி வரை செயற்படுத்தப்படும் என தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய விதத்தில் செயற்படுத்தப்படும் வெளியீட்டு உதவித் திட்டத்தில், கல்வி, ஆராய்ச்சி, நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம், குழந்தைகள் படைப்புகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், உதவித் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிறந்த கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படைப்புகளுக்கு ரூ.150,000.00 நாவல்களுக்கு ரூ. 100,000.00, சிறுகதைத் தொகுப்புக்கு ரூ.100,000.00, கவிதை, சிறுவர் இலக்கியம் மற்றும் குழந்தை படைப்புகளுக்கு ரூ.75,000.00 என இது ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்துப் படைப்புகளும் 2025 ஆம் ஆண்டின் இலக்கிய மாதத்தில் வெளியிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மேலும் தெரிவித்துள்ளது.




பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையை, பொரளையிலுள்ள பேராயரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்று முன்தினம் (03) சந்தித்து கலந்துரையாடியதுடன் அன்றைய தினம் பிற்பகல் இலங்கைத் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட ஆயர் துஷாந்த ரொட்ரிகோவையும் சந்தித்துப் கலந்துரையாடினார். இந்த சந்திப்புகளின்போது, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரியும் கலந்துகொண்டார்.

# இணைய பாதுகாப்பு விழிப்புணர்வு செயலமர்வு

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

இணைய பாதுகாப்பு தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வொன்று அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய தலைமையில் அநுராதபுர மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இவ்வேலைத்திட்டம் இலங்கையின் கணினி அவசர பதில் மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இணைய அச்சுறுத்தல்களின் பின்னணியை தெரிந்து கொள்வது, அது தொடர்பான வழக்கு ஆய்வுகளை விளக்குவது, இணைய அச்சுறுத்தல்களின் பொதுவான தன்மைகளை தெரிந்து கொள்வது மற்றும் இணையப் பாதுகாப்பிற்கு எடுக்க வேண்டிய அடிப்படை நடவடிக்கைகள் போன்ற சில முக்கிய அம்சங்கள் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டுவதே இதன் நோக்கமாகும். சைபர் பாதுகாப்பு மற்றும் திறன் அபிவிருத்தி, ஆராய்ச்சி முகாமையாளர் திலின திசாநாயக்க, அமைப்பின் பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷா ஆனந்த மற்றும் கணினி அவசர பதில் மன்றத்தில் தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் செனுர ரத்நாயக்க ஆகியோர் இந்நிகழ்வை நடத்தினர். இதன் போது உரையாற்றிய அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய, இணைய பாவனையில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதுடன், மாவட்ட அதிகாரிகள் கணினி விடயத்தில் மேலும் முன்னேற்றமடைய வேண்டும். எனவே எதிர்காலத்தில் விசேட வேலைத் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.




# கொழும்பு தமிழ்ச் சங்க நூலகத்தில் நவராத்திரி கொலு அலங்கரிப்பு



கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் நவராத்திரி தினத்தை முன்னிட்டு கொலு அலங்காரம் செய்யப்பட்டிருப்பதை படத்தில் கானலாம்

# கல்வி சேவையில் 40வருட பூர்த்தி

**(உடப்பு குறூப் நிருபர்)**

புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் ஆசிரிய ஆலோசகரும், பாட இணைப்பாளரும், பதில் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வெ.அருணாகரன் தமது கல்வி சேவையில் 40 வருடங்களை பூர்த்தி செய்துள்ளார்.

இவர் மட்டக்களப்பு துறைநீலாவனை கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட வெள்ளைகுட்டி லெட்சுமி தம்பதியினரின் புதல்வராவார். தனது ஆரம்பக் கல்வியை துறை நீலாவனை மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை துறை நீலாவனை மகா வித்தியாலயத்திலும் உயர்தர கல்வியை மருதமுனை அல்மனார் மகா வித்தியாலயத்திலும் கற்றவர்.



பேராதனை பல்கலைக்கழகத்தில் இளம் கலைமாணிப் பட்டத்தையும் தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டபின் கல்வி டிப்ளோமாவையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் தனது முதல் ஆசிரியர் நியமனத்தை 1984 ஆம் திகதி பெற்று, புத்தளம் கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக இணைந்து கொண்டார். பின்னர் இலவங்குளம் முஸ்லிம் வித்தியாலயத்திலும் கடமை புரிந்தார். அவ்வேளையில் ஆசிரிய ஆலோசகராக 1998ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று புத்தளம் வலயக் கல்விப் பணிமனையில் இணைந்துகொண்டார். அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு முதல் பாட இணைப்பாளராக பதவி உயர்வு பெற்றார். அதாவது 40 வருடங்கள் வரை தமது புத்தளம் கல்விப் பணிமனையில் தனது சேவையை சிறப்பாக வழங்கியுள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் புத்தளம் கற்கை நிலையத்தில் பகுதி நேர விரிவுரையாளராக பணியாற்றினார்.

வடமேல் மாகாண முன் பிள்ளை விருத்தி டிப்ளோமா பாடநெறி ஆசிரியர்களுக்கான வளவாளராகவும் கடமை புரிகின்றார்.

இன்று கல்வித்துறையில் பன்முக ஆளுமையுடன் வளவாளராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவர் கல்வி புலத்தின் புதிய சிந்தனைகளையும் போக்குகளையும் நன்குணர்ந்து அதனை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் விளங்கினார்.

# மஸ்கெலியா புரவுன்லோ பகுதிக்கு கிராம உத்தியோகத்தரை நியமிக்குமாறு கோரிக்கை

**(மஸ்கெலியா தினகரன் நிருபர்)**

மஸ்கெலியா புரவுன்லோ தோட்டப்பிரிவுக்கு தனியான கிராம உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் ராஜ் அசோக் வலியுறுத்தியுள்ளார். மஸ்கெலியா புரவுன்லோ கிராமசேவகர் பிரிவுக்கு தனியாக கிராம உத்தியோகத்தரொரு வரை நியமிக்க வேண்டுமென பல முறை கோரிக்கை விடுத்த போதிலும் இது இன்னும் சாத்தியமாகவில்லை.

இதனால் புரவுன்லோ, கங்கேவத்தை,களனிவத்த, கிலன்டில், பிரேமா போன்ற பகுதிகளை சேர்ந்த 7000 மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துவருகின்றனர். இப்பகுதியில் நியமிக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் மஸ்கெலியா 320A பிரிவில் பிரதானமாகவும் புரவுன்லோ 320N பிரிவில் பகுதி நேரமாக வியாழக்கிழமையில் மாத்திரம் கடமையில் ஈடுபடுகின்றார்.



கடந்த இரண்டு வருடங்களாக இந்த முறைபாட்டை மஸ்கெலியா பிரதேச சபையில் பிரேரணை மூலம் முன் வைத்துள்ளேன்.

அப்போது பதில் உத்தியோகத்தர்கள் குறைவாகவுள்ளமையால் புதிதாக நியமனம் வழங்கியவுடன் ஒருவரை பெற்றுத்தருகின்றோம் என கூறினார்கள். எனினும் இன்னும் ஒரு கிராம உத்தியோகத்தர் ஒருவரை வழங்கவில்லை, இது தொடர்பாக நோர்வூட் பிரதேச செயலாளரிடம் நியமனம் வழங்கும் முன்னர் நேரில் சென்று முறையிட்டிருந்தேன். நேற்றைய தினமும் முறைப்பாடு செய்துள்ளேன். எனினும் விரைவில் தீர்வு தராவிட்டால் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்கி போராட வேண்டியிருக்கும்என அவர் தெரிவித்தார்.

## மலைச்சாரல்

# கண்டியில் தனியார் நிறுவனமொன்றுக்கு தெடிகம நாமத்தை பயன்படுத்த நீதிமன்றம் இடைக்காலத் தடை

"தெடிகம" என்ற பெயரைப் பயன்படுத்தி தங்க அடகு வியாபாரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கண்டியில் தனியார் நிறுவனமொன்றுக்கு தெடிகம என்ற வர்த்தக நாமத்துடன் கூடிய வர்த்தக முத்திரையை பயன்படுத்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. பெர்ணாந்து இடைக்கால தடையுத்தரவு விதித்தார். தெடிகம என்ற வர்த்தக முத்திரை பயன்படுத்த தனக்கு உரிமை இருப்பதாக பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனையை நிராகரித்து இந்த தடை உத்தரவு விதிக்கப்பட்டது. தெடிகம வர்த்தக நாமத்தை ஒத்த பெயர்களைப் பயன்படுத்தி நியாயமற்ற போட்டியில் ஈடுபடுவதைத் தடை செய்து குருநாகல் வீதி, கட்டுகஸ்தோட்டை, கண்டி, விலாசத்தில் இயங்கும் டி.ஏ.சி.பி. தெடிகம அடகு தனியார் நிறுவனத்துக்கு எதிராக இந்தத் தடையுத்தரவு வழங்கப்பட்டது.

தெடிகம அடகு நிலையம், தெடிகம தங்கக் கடன் நிலையம், தெடிகம அடகு தரகர்கள், ஆகிய வர்த்தக நாமங்களை பயன்படுத்துதல் தெடிகம பெயரில் விளம்பரம் செய்தல், தெடிகம என்ற பெயரில் புதிய கடைகளைத் திறப்பது என்பவற்றுக்கு எதிராக இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை வீதி, மஹரகம தெடிகம குரூப் பிரைவேட் லிமிடெட் மற்றும் அதன் தலைவர் ரஞ்சன் மலின் தெடிகமவினால் புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த பின்னர் இந்த இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# மடவளை பாடசாலை மாணவன் கொலை; காதலி உள்ளிட்ட எழுவர் கைது

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

மஹாவெல மடவளை உல்பத்த பிரதேசத்தில் மாணவன் ஒருவரை கொடூரமாக தாக்கி கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் கடுமையான தண்டனை வழங்குமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்று (04) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவன் கல்வி பயின்ற பாடசாலைக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

மாத்தளை மடவளை உல்பத்த பிரதேசத்தில் எம்.யுகேஸ் என்ற 17 வயது பாடசாலை மாணவன் உலக சிறுவர்கள் தினமான கடந்த முதலாம் திகதி உயிரிழந்தார்.

இவர் தனது நண்பரின் காதலி என கூறப்படும் 16 வயது மாணவியை சந்திப்பதற்காக மேலும் இரு நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் அப்பகுதிக்கு சென்றுள்ளார்.

அன்று மதியம் அந்த வீட்டுக்குச் சென்றதும் வீட்டின் அருகே மோட்டார் சைக்கிளை நிறுத்திய போது, காதலியின் சகோதரி மோட்டார் சைக்கிளின் சாவியை எடுத்துச் சென்றுள்ளார். இதன் போது ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கர்ப்பிணியான சகோதரி தரையில் வீழ்ந்ததுடன் இதனால் கோபமடைந்த அவரது கணவன், மாணவர்கள் மூவரையும் தாக்கியதாக மஹாவெல பொலிஸார் தெரிவித்தனர்.

அப்போது, மாணவியின் தந்தை, மற்றொரு சகோதரி மற்றும் உள்ளூர் வாசிகள் இருவரும் மோதலில் ஈடுபட்டனர்.

தடிகளாலும் பாதுகாப்பு தலைக் கவசத்தாலும் அவர்களை தாக்கியதில் யுகேஸ் என்ற மாணவன் பலத்த காயமடைந்து தரையில் விழுந்து மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவனின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றன.

மற்றைய இரு நண்பர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், 16 வயதுடைய மாணவி, அவரது தந்தை, இரண்டு சகோதரிகள், ஒரு சகோதரியின் கணவர், மேலும் இருவர் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

## 33 வயதுடைய சந்தேகநபர் கைது

**(அக்குறணை குறூப் நிருபர்)**

ரம்புக்கனை பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் மது அருந்திக் கொண்டிருந்த இருவரில் ஒருவர் மற்றவரைத் தாக்கியதில் அவர் மரணமடைந்துள்ளார்.

வீடொன்றில் மது அருந்திக்கொண்டிருந்த இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தார்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியதில் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி மற்றவர் உயிரிழந்துள்ளதாக ரம்புக்கென்ன பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தாக்குதல் கூரிய ஆயுதத்தால் மேற்கொள்ளப்பட்டதாகவும் தாக்குதலுக்கு இலக்கானவர் ஆபத்தான நிலையில் தலம்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் கொத்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்

கொலைச் சம்பவம் தொடர்பில் கப்பல – கொட்டவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கூரிய ஆயுதமும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# தடைசெய்யப்பட்ட ஆயுதங்களுடன் ஒருவர் கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

தடைசெய்யப்பட்ட ஆயுதங்களுடன் சந்தேகநபரொருவர் நேற்று (4) தெஹியோவிட்ட தெபேகம பிரதேசத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இவரைச் சோதனையிட்ட போதே இவரிடமிருந்து போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. இவரது வீட்டை சோதனை செய்த போது அங்கு மேற்படி ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 5 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்

சுபஹ் - 04.43
ளுஹர் - 12.01
அஸர் - 03.16
மஃரிப் - 06.01
இஷா - 07.11

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் புரட்டாதி 19

ராகுகாலம் : காலை : 9.02 - 10.32வரை
சுபநேரம் : மாலை : 3.02 - 4.32வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# ஜப்பான், பிரிட்டன், கொரியா உள்ளிட்ட நாடுகள் பல பிரதமர் ஹரிணிக்கு வாழ்த்து

நாடுகளுக்கிடையிலான கூட்டாண்மையை வலுப்படுத்துவதாகவும் உறுதி; பல நாடுகளில் இருந்து பிரதமருக்கு வாழ்த்து!







பிரதமராக பதவியேற்றுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரியவை, பிரதமர் அலுவலகத்தில் வைத்து சந்தித்த பல நாடுகளின் தூதுவர்கள், தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர். ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, கொரியா, பங்களாதேஷ் மற்றும் மாலைத்தீவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களே இவ்வாறு பிரதமரைச் சந்தித்துள்ளனர்.

இதன்போது, பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு வாழ்த்து தெரிவித்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேக்கி, ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் கூடிய தொலைக்காட்சி ஒளிபரப்புகளை டிஜிட்டல் மயமாக்குதல், ஜப்பானின் மானியங்கள் மற்றும் கடன்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் ஆரம்பித்தல், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுதல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

06

ஐக்கிய நாடுகள் அமைப்பின்

# இலங்கைக்கான இணைப்பாளர் மார்க் ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் மார்க் அண்ட்ரூ பிரான்ஸ் (*Marc Andru Franche*) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியா குட்டாரஸின் வாழ்த்துச் செய்தியை ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட இணைப்பாளர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் வழங்கி வைத்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பண்பான தன்மைக்கும் வாழ்த்து தெரிவித்த இணைப்பாளர் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வரவேற்றார். மக்கள் எதிர்பார்ப்புக்கள் அதிகளவில் காணப்படுவதனால் எதிர்வரும் காலம் சவாலானதாக அமையுமென சுட்டிக்காட்டிய ஐ.நா.இணைப்பாளர் சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் வேலைத்திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கு ஐ.நா ஒத்துழைப்பு வழங்குமெனவும் உறுதியளித்தார்.

06

# அமைச்சர் ஜெய்சங்கர் எழுதிய நூலின் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் கையளிப்பு



இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரின் *"The India Way: Strategies for an Uncertain world"* என்ற ஆங்கில நூல் பாத்ஃபைண்டர் அறக்கட்டளையினால் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த நூலின் முதல் பிரதியை அறக்கட்டளையின் நிறுவுனர் மிலிந்த மொரகொடவினால், நேற்று (04) இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெயசங்கரிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் *Pathfinder Foundation* இன் நிறுவுனர் மிலிந்த மொரகொட, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பாத்ஃபைண்டர் தலைவர் பெர்னாட் குணதிலக்க மற்றும் பாத்ஃபைண்டர் ஆலோசகர் (தொடர்புகள்) காமினி சரத் கொடகந்த ஆகியோர் கலந்துகொண்டனர். *'The India Way: Strategies for an Uncertain World"* என்ற நூலின் சிங்கள மொழி பெயர்ப்பை அஜித் பெரகும் ஜயசிங்க செய்துள்ளார்.

# கொழும்பு பங்குச் சந்தை நேற்று அதிகரிப்பு



கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று (04) 123.50 புள்ளிகளால் அதிகரித்துள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது. அதன்படி, நேற்றைய பரிவர்த்தனைகளின் முடிவில், அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 12,053.49 புள்ளிகளாக பதிவு செய்யப்பட்டன. நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் மொத்த புரள்வு 2.8 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

2024 ஜூலை 03ஆம் திகதிக்கு பின்னர் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 12,000ஐ கடந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்நாளில் பார்க்க வேண்டிய

# சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 05ஆவது இடம்

*CEOWORLD* என்ற இதழ் தொகுத்துள்ள வாழ்நாளில் பார்க்க வேண்டிய சிறந்த நாடுகளின் பட்டியலின் தரவரிசையின்படி, இலங்கை 05ஆவது இடத்தை பிடித்துள்ளது.

முதலாவது இடத்தில் தாய்லாந்து, இரண்டாவது இடத்தில் கிரீஸ், மூன்றாவது இடத்தில் இந்தோனேஷியா மற்றும் நான்காவது இடத்தில் போர்த்துக்கல் ஆகிய நாடுகள் காணப்படுகின்றன.

இதேவேளை, இலங்கை தொடர்பாக *CEOWORLD* இதழ், ஆயுர்வேத சிகிச்சை, மறக்க முடியாத ரயில் பயணங்கள் அல்லது தேயிலைத் தோட்டத்தைப் பார்வையிடுவது என அனைத்து வகையான பயணிகளுக்கும் இலங்கையின் மலைநாடு பரந்த அளவிலான அனுபவங்களை வழங்குகிறது என குறிப்பிட்டுள்ளது.

பௌத்த விகாரைகளில் கொண்டாடப்படும் போயா சம்பிரதாயத்துடன், கலாசாரம் மற்றும் மரபுகள் நிறைந்த நாடு இலங்கை எனவும் இலங்கையில் ஆரோக்கியமான காலை உணவை அனுபவிக்கவும் வாய்ப்புள்ளதெனவும் கூடுதலாக, நுகர்வில் அதிக ஆர்வமுள்ளவர்களுக்கு இலங்கை ஒரு சிறந்த இடமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இரத்தினங்கள், தேநீர், கைத்தறி துணிகள், தோல் பொருட்கள், பழங்கால பொருட்கள், நகைகள் மற்றும் மட்பாண்டங்கள் ஆகியவற்றைக் இலங்கை நாட்டில் காணலாம். 295,000 க்கும் மேற்பட்ட வாசகர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தரவரிசை தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# UNDP பிரதிநிதி ஜனாதிபதியின் செயலாளருடன் சந்தித்து பேச்சு

தொடர் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உறுதி



ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் (UNDP) வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோடா (*Azusa Kubota*) நேற்று முன்தினம் (03) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கைக்குள் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது மற்றும் இலங்கை – ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்குமிடையிலான ஒத்துழைப்பு வேலைத்திட்டம் குறித்தும் இதன்போது தீர்க்கமாக கலந்தாலோசிக்கப்பட்டது.

இலங்கையின் புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஆர்வம் தொடர்பாகவும் வதிவிடப் பிரதிநிதி இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கு தெளிவுபடுத்தினார்.

ஊழலுக்கு எதிரான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு பாராட்டுத் தெரிவித்த அசூசா குபோடா, அரச சேவையின் வெளிப்படைத் தன்மை மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக விரைவில் டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

06

வாக்குகள் சிதறடிக்கப்படாமலிருக்க

# தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து தேர்தலில் போட்டியிட வேண்டும்

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு அழைப்பு

**யாழ் . விசேட நிருபர்**

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிட்டால் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு, தமிழ் பிரதிநிதித்துவங்கள் இல்லாமல்போகும் அபாயம் உள்ளதால், தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட வேண்டுமென வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கூட்டாக அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று (04) வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இதனை தெரிவித்த வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு, மேலும் தெரிவிக்கையில்,



நிலையான, கௌரவமான உரிமைகளுடன் கூடிய நிலையான அரசியல் தீர்வு கோரி எமது வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு, 2022 ஆம் ஆண்டு சமஷ்டி தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை வெளியிட்டிருந்தது.

இன்று வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களான நாம் எதிர்கொண்டுவரும்அரசஇனவாதஅடக்குமுறையிலிருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழவேண்டுமாயின் நிலையான அரசியல் தீர்வே அவசியம். எமது வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு, தமிழ் தேசியப் பரப்பிலுள்ள தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் அரசியல் தலைமைகளுக்கு ஓர் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கிறது. இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பொதுத்தேர்தலில் போட்டியிடப் போகும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், கட்சி ரீதியாக தனித்து போட்டி இடாமல் ஓர் கூட்டாக அல்லது கூட்டணியாக தேர்தலில் போட்டியிட்டு வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அதிக மக்கள் பிரதிநிதிகளை பாராளுமன்றம் அனுப்ப வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் கூட்டாக இணையாத சந்தர்ப்பத்தில் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் குறைவடைவதுடன், குறிப்பாக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களை இழக்க வேண்டி நேரிடும் என வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது.

ஒக்டோபர் மாதத்துக்கான திருத்தம்

# லாஃப்ஸ் சமையல் எரிவாயு விலையில் மாற்றமில்லை



லாஃப்ஸ் எரிவாயு தொடர்பாக ஒக்டோபர் மாதத்துக்கான விலை திருத்தத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாதென நிறுவனத்தின் பணிப்பாளர் நிரோஷன் ஜே பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது 12.5 கிலோ லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர் 3,680 ரூபாவுக்கும், 5 கிலோ எரிவாயு சிலிண்டர் 1,477 ரூபாவுக்கும் மற்றும் 2.3 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டர் 694 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# கனடாவில் யாழ்.பெண் கொலை பெண்ணின் சகோதரன் கைது



கனடா ஸ்காபுரோ பகுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும், இச் சம்பவம் தொடர்பாக பெண்ணின் சகோதரன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

54 வயதான துஷி லட்சுமணன் என்ற பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.


கனடாவின் *Orton Park – Ellesmere* சந்திப்புக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தக் கொலைச் சம்பம் இடம்பெறுள்ளதுடன், கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டமையினால் இப் பெண் உயிரிழந்துள்ளதாக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக, உயிரிழந்த பெண்ணின் சகோதரர் மீது இரண்டாம் நிலை கொலை குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், டொராண்டோ நகரைச் சேர்ந்த அவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதிலும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும், கொலைக்கான காரணங்கள் இதுவரை தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இலங்கை – இஸ்ரேலுக்கிடையேயான

# அனைத்து விமான சேவைகளும் 07 ஆம் திகதி வரை இரத்து



இலங்கைக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான அனைத்து விமான சேகவைகளும் எதிர்வரும் 07ஆம் திகதி வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

ஈரானின் தாக்குதல்களையடுத்து டெல் அவிவ் விமான நிலையத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

07ஆம் திகதிக்கு முன்னைய நாட்களில் இரு நாடுகளுக்கும் இடையே விமான பயணங்களை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தவர்கள் பயணத்துக்கான உரிய திகதியை மாற்றி அமைக்குமாறு தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அங்கு தங்கியுள்ள அனைத்து இலங்கையரும் பாதுகாப்பாக இருப்பதாகவும், எதிர்காலத்தில் ஏதேனும் அனர்த்த சூழ்நிலை ஏற்படுமாயின் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

முடிந்தவரை பயணங்களை குறைத்து வீட்டிலேயே இருக்குமாறு இஸ்ரேலிய அரசாங்கம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

எதிர்கால தாக்குதல்களிலிருந்து பொது மக்களின் பாதுகாப்புக்காக நிலத்தடி முகாம்கள், நிலத்தடி மருத்துவமனைகள் மற்றும் அவசரகால அம்பியூலன்ஸ் சேவைகளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இஸ்ரேலிய அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
குரோதி வருடம் புரட்டாதி மாதம் 19ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 01

### குறள் தரும் சிந்தனை

எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்

*யாராலும் விரும்பப்படாத ஒருவன், தன் மரணத்திற்குப் பிறகு எஞ்சி நிற்கப் போவது என்று எதனை நினைத்திட முடியும்?*

## பொருளாதார முன்னேற்றத்துக்கு அனைவர் ஒத்துழைப்பும் அவசியம்

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இச்செய்தி கடந்த திங்களன்று இரவு வெளியானதும் மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். எரிபொருட்களின் விலைக்குறைப்பின் விளைவாக ஏனைய பொருட்கள் பலவற்றின் விலைகள் குறைவடையும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

எரிபொருட்களின் விலைக்குறைப்பின் பயனாக பஸ்கட்டணங்கள், உணவுப் பொருட்களின் விலைகள் போன்றவற்றின் விலைகள் மேலும் குறைவடைவதற்கு வாய்ப்பு உள்ளது. அது மாத்திரமன்றி, போக்குவரத்துக் கட்டணங்கள் குறைவதால் தூர இடங்களில் இருந்து கொண்டுவரப்படுகின்ற பாவனைப் பொருட்களின் விலைகள் குறைவதற்கும் வாய்ப்பு உள்ளது. எனவேதான் எரிபொருட்களின் விலைக்குறைப்பானது மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

மக்களின் அன்றாட வாழ்வில் எரிபொருட்கள் எத்தனை அத்தியாவசியம் என்பதை இரு வருடங்களுக்கு முன்னர் பொருளாதார நெருக்கடி உச்சக் கட்டத்தில் இருந்த போது, நாமெல்லாம் அறிந்து கொண்டோம். எரிபொருள் நிரப்புநிலையங்களுக்கு முன்பாக கிலோமீற்றர் தூரத்துக்கு வாகனங்கள் வரிசையில் நிறுத்தப்பட்டிருந்த காட்சிகள் எமது கண்முன்னால் இன்றும் நிழலாடுகின்றன.

நான்கு லீட்டர் பெற்றோலைப் பெற்றுக் கொள்வதற்காக இரவு முழுவதும் வீதியோரம் உறங்கிய அனுபவம் மக்கள் பலருக்கு உள்ளது. பெற்றோல், டீசல் போன்றவற்றின் முக்கியத்துவம் அன்றைய வேளையில் நம் அனைவருக்கும் நன்கு புரிந்தது. எமது மக்களை மாத்திரமன்றி, முழுஉலகையுமே இயக்குகின்ற சக்திவளம் எரிபொருள் ஆகும்.

போக்குவரத்து செய்வதற்கு, வியாபார நடவடிக்கைகளுக்கு, மின்சார உற்பத்தி என்றெல்லாம் எரிபொருட்கள் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுகின்றன. எரிபொருட்களின் விலை அதிகரித்தாலோ அல்லது எரிபொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டாலோ மக்களால் அதனைத் தாங்க முடியாமல் போய்விடும். நியாய விலையிலும், பற்றாக்குறை இன்றியும் எரிபொருட்கள் கிடைத்தாலேயே மக்களால் அவதியின்றி வாழ முடியும்.

புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் முதல் தடவையாக எரிபொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. உலக சந்தையில் நிலவுகின்ற விலைக்கு அமைவாக இவ்விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் மக்களின் சுமைகளைக் குறைப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமென்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும், எரிபொருளை ஆதாரமாக வைத்து தொழில் செய்கின்றவர்களால் தயாரிக்கப்படுகின்ற உணவு மற்றும் ஏனைய பொருட்களின் விலைகளும் குறைக்கப்படுவதே மிக முக்கியமாகும். எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்ட செய்தி வெளியிடப்பட்ட அடுத்த தினமே பஸ் கட்டணத்தைக் குறைப்பதென்ற அறிவிப்பும் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பஸ் கட்டணத்தைக் குறைத்துள்ள தனியார் பஸ் உரிமையாளர்கள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்களாவர். மக்களின் சுமைகளைக் குறைக்க வேண்டுமென்ற அக்கறை கொண்டவர்களாக அவர்கள் உள்ளனர். அதேவிதமான அக்கறையை ஏனைய தரப்பினரும் பின்பற்றுவது அவசியமாகும். இங்கு பிரதானமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் உணவுக் கடைகளின் உரிமையாளர்கள் ஆவர்.

சமையல் எரிவாயுவுக்கு விலை குறைக்கப்பட்டால் உணவுகளின் விலையை சிறிதளவே அவர்கள் குறைக்கின்றனர். எரிவாயு விலைக்குறைப்புக்கேற்ப அவர்கள் உணவுகளின் விலையைக் குறைப்பதில்லை. இவ்விடயத்தில் உணவக உரிமையாளர்கள் சிந்தித்து முடிவெடுப்பது அவசியம்.

கிராமப் பகுதிகளில் இருந்து கொழும்பு போன்ற நகரங்களுக்கு அன்றாடம் தொழிலின் நிமித்தம் வந்து செல்கின்றவர்கள் நகரங்களிலுள்ள உணவகங்களையே நம்பியிருக்கின்றனர். இவ்வாறு தினமும் உணவுக் கடைகளை நம்பியிருக்கின்றவர்களின் தொகை மிகவும் அதிகமாகும். இவர்களெல்லாம் அன்றாடம் உணவகங்களையே நம்பியிருக்கின்றனர். இவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு உணவுகளின் விலையை நியாயமானபடி குறைப்பதற்கு உணவக உரிமையாளர்கள் தீர்மானமெடுப்பது முக்கியமாகும்.

மக்களின் வாழ்க்கைச் சுமையை முடிந்தளவு குறைக்க வேண்டுமென்பது புதிய அரசாங்கத்தின் எண்ணமாகும். அதற்கான நடவடிக்கைகளிலேயே அரசாங்கம் தற்போது துரிதமாக ஈடுபட்டு வருகின்றது. நிலைமை இவ்வாறிருக்கையில், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகின்றது.

புதிய மாற்றமொன்றை எதிர்பார்த்தே மக்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருந்தனரென்பதை மறந்து விடலாகாது. கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய ஊழல், மோசடிகள், வீண்விரயங்கள் ஒழிக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதும், அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கை வளர்ச்சியடைய வேண்டுமென்பதும் மக்களின் குறிக்கோளாக இருந்தது. அதன் காரணமாகவே 'முறைமை மாற்றம்' ஒன்றை எதிர்பார்த்து இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் பெருமளவில் வாக்களித்திருந்தனர்.

இத்தகைய முறைமை மாற்றம் செயலுருப்பெற வேண்டுமானால் வர்த்தக சமூகத்தினரின் ஒத்துழைப்பும் அவசியமாகின்றது என்பதை மறந்துவிடலாகாது. பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடு என்ற அவப்பெயரை நீக்குவதானால், அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# மத்திய கிழக்கை பிரித்தாளும் மறைமுக முயற்சியில் மேற்குலகு



*"ஈரானிலோ மத்திய கிழக்கிலோ இஸ்ரேலின் கைகள் எட்டாத இடங்களில்லை. நாங்கள் நினைத்தால் எந்தப் பிரதேசத்தை வேண்டுமானாலும் இலக்குகள் வைத்து தாக்குதல்களை மேற்கொள்வோம். இது எவ்வளவு உண்மை என்பதனை தற்போது நீங்கள் அனைவரும் புரிந்து கொள்வீர்கள்."*

நெதன்யாகு

*"எங்களுக்கு எந்த இடமும் வெகு தொலைவில் இல்லை. நான் எதிரிகளை துரத்துவேன். அவர்களை அழிக்காமல் நான் திரும்ப மாட்டேன்."*

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர்

இந்தச் செய்திகள் எத்தனை உண்மையானது என்பதை மத்திய கிழக்கு நாடுகளும் ஏன் உலகம் கூட கண்டுகொள்ள வேண்டிய முக்கிய தருணத்தில் இருக்கிறது.

தனது நேச நாடுகளென மத்திய கிழக்கு நாடுகளுக்குள் (அரபு நாடுகளுக்குள்) நண்பனாக ஊடுருவிய மேற்குலகு (குறிப்பாக அமேரிக்கா) தனது விமானத் தளங்களையும் படைவீரர்களையும் அங்கு குவித்து வைத்திருப்பதன் வினைகளை இன்று சில முஸ்லிம் நாடுகளும் நாளை ஒட்டுமொத்த அரபுலகும் அனுபவிக்க எதிர்பார்த்து இருக்கிறார்கள் என்று கூறினாலும் அது மிகையாகாது.

தன் செல்லப் பிள்ளை இஸ்ரேல் குண்டுகளை வைத்து தனது பக்கத்து நாடுகளை மக்களை துரத்தி விளையாடுவதையும் கையில் வைத்து நசுக்கி தலை காலென பிய்த்து நெருப்பில் இட்டு மகிழ்வையும் எதிர்க்கும் போதெல்லாம் இஸ்ரேலின் போதிய பாதுகாப்பிற்காக போர்விமானங்களைத் தனது தளங்களில் நிறுத்தியும் தாக்கியும் மற்றும் செங்கடல் மத்திய தரைக்கடல் பகுதிகளில் போர்க் கப்பல்களை கொண்டு வந்தும் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலை அது தடுக்கிறது.

இன்னும் அமெரிக்கா அடுத்த நாடுகள் தாங்கள் இறைமையை மீறியதாக குற்றம் சுமத்தினால் உலக எதிர்ப்பில் இருந்து இஸ்ரேலை பாதுகாக்க அது தற்காப்பு நிமித்தம் தாக்குவதாக இரும்பு அரண் போல நின்றும் காப்பாற்றுகிறது .

### அரபு நாடுகளை மோதவிடும் தந்திரமா?



இங்கு நெதன்யாகுவின் உரைப்பகுதி எமக்கு விபரித்து வைக்கும் செய்தியும் இதே.

அமெரிக்காவும் மேற்குலகும் அவர்களுக்கு ஆதரவாளர்களாக இருக்கும் போது யாரையும் எந்த நாட்டையும் பயமின்றி தாக்கும் வல்லமை தாங்களுக்கு உண்டு என்பதை மிக உறுதியாக கூறுகின்றார்கள் என்றே எடுத்துக் கொள்ளலாம்.

உலகில் 157 கோடிக்கும் அதிகமான முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இஸ்லாமிய மதத்துக்குள் உள்ள ஷியா சுன்னி பிரச்சினையை மத்திய கிழக்கில் மிகப்பாரதூரமானதும் பயங்கரமானதாகவும் ஆக்கி அவர்களுக்குள் மோதவிட்டு போருக்கான உதவி மற்றும் சமாதானத் தளமொன்றை கட்டியெழுப்பும் பிரித்தாளுகையின் சூழ்ச்சியாளனாகவே மத்திய கிழக்கின் நண்பனாக காவலனாக அமேரிக்கா உள்நுழைந்தது.

இன்று முஸ்லிம்களை அழிக்க இஸ்ரேலுக்கான அமேரிக்காவின் உதவி மிகப் பெரியது. பல பில்லியன்கணக்கில் ஆயுதங்கள் அள்ளி வழங்கி திட்டங்களையும் மிகக் கச்சிதமாக போட்டு வழிநடத்திக் கொடுக்கின்றது அமெரிக்கா.

அதன் துணையின்றி இஸ்ரேலால் ஒரு நாளும் இன்று நடக்கும் பெரிய தாக்குதல்களை தனியாக செய்து முடிக்க முடியாது என்பது பேருண்மையாகும்.

அவ்வாறு இருக்க பலஸ்தீனம், லெபனான், எமனென மத்திய கிழக்கை பற்றியெரியவைக்கும் இஸ்ரேலின் அனைத்துமாக தோழனாக மேற்குலகு இருக்கிறது என்பதை நெதன்யாகுவின் உரையின் இந்தப் பகுதி தெளிவுபடுத்துகின்றது.

இது எவ்வளவு உண்மைகளின் செறிவு மற்றும் யதார்த்தம் என்பதை ஏன் புரியாமல் இன்னும் இந்த மத்திய கிழக்கு நாடுகளும் அரபு உலகும் இயங்குகிறது என்பதைத்தான் இதுவரை விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது.

இவர்கள் அமெரிக்காவின் (மேற்குலகின்) அடிமைகளாகி போய்விடுவார்கள் என்று தான் எண்ணத் தோன்றுகின்றது.

முஜாமலா

# மலையக மக்களின் அவலத்தை சித்தரிக்கும் ஜெயசிங்கின் 'மீண்டும் தேயிலையின் வாசம்'

சென்ற நூற்றாண்டின் எண்பதுகளில் சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையிலிருந்து மலையகத் தமிழர்கள் தமிழகத்திற்குத் திரும்பும் நிலை வேகங் கொண்டிருந்தது. இலங்கை அரசும் இந்திய அரசும் செய்து கொண்ட இந்தக் கோர ஒப்பந்தத்தில் சிக்குண்டு சிதைந்து போன மக்களின் அவலம் குறித்து பிரைஸ் யுவோன்(Yvonne Fries), பிபின் தோமஸ் (Bibin Thomas) ஆகிய இரண்டு சுவீடன் பத்திரிகையாளர்கள் எழுதிய The Undesirables: the expatriation of the Tamil people 'of recent Indian origin' from the plantations in Sri Lanka to India (1984) என்ற நூல்தான் பாதிப்புற்ற மக்களின் கோணத்திலிருந்து எழுதப்பட்ட முதல் நூல்.



'விரும்பப்படாதவர்கள்' என்று அந்த நூலுக்கு அழகான தலைப்பிட்டிருந்தார்கள். பல ஆண்டுகளுக்கு முன் பிபின் தோமஸ் அவர்களுடன் நான் தொடர்பு கொண்டபோது, பிரைஸ் யுவோன் மறைந்துவிட்ட செய்தியை எனக்குக் கூறியிருந்தார். தாயகம் திரும்பும் இந்த விவகாரத்தை அவர்கள் 'நாடுகடத்தல்' (Deportation) என்றே அழைத்தனர். தமிழகம் திரும்பிய பன்னூற்றுக்கணக்கான மலையகத் தொழிலாளர்களை அவர்கள் நேர்கண்டனர். வேதனையில் தோய்ந்த அவர்களின் எண்ணக்குமுறல்களைப் பதிவு செய்தனர். அந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் அந்த மக்களின் கண்ணீரில் எழுதப்பட்டிருக்கிறது.



தாயகக் கனவுகளோடு தமிழகம் சென்றவர்கள் 'செத்துப் போகலாம்' என்று தங்கள் துயரத்தைக் கொட்டும் பரிதாபக் கோலத்தைப் பதிவு செய்கிறது இந்த நூல்.

தாயகம் திரும்பிய தமிழர்கள் கொடைக் கானலில் கொத்தடிமைகளாக வாழ்ந்த கோரத்தைச் சித்தரிக்கிறார்கள் ஆர்.வித்யா சாகர் உள்ளிட்ட ஆய்வாளர்கள். The Human Cost of Commercial Forestry: A study of the Conditions of Coupe Labourers in Kodaikanal (1986) என்ற இவர்களின் நூல் வாழ்நாளிலேயே அந்த மக்கள் அனுபவித்திராத கொடுமைகளைப் பட்டியலிடுகிறது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதுமாணிப் பட்டப்படிப்பின் ஆய்வுப் பொருளானார்கள். ஆர்.ராதா இந்த ஆய்வேட்டை 1984 இல் சமர்ப்பித்து தமது முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

எந்தச் சொத்துப்பற்றுகளும் இல்லாமல் வறுமையில் வாடும் தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்களின் பரிதாபநிலையை ஆய்வுபூர்வமாக நிறுவுகிறார் எம்.வாமதேவன். கள ஆய்வுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அவரின் சமூக, பொருளாதார ஆய்வு Sri Lankan Repatriates in Tamil Nadu Rehabilitation and Integration என்ற தலைப்பில் 1986 இல் வெளியாகியது.

இர.சிவலிங்கம் அவர்கள் சென்னையிலிருந்து நடத்திய Exodus என்ற ஆங்கில மாத இதழ், தாயகம் திரும்பிய மக்களின் பிரச்சினைகளைத் தொடர்ச்சியாக எழுதி, இந்திய ஆளும் அதிகாரத்தோடு மூர்க்கமாக மோதிக்கொண்டிருந்தது. டி.எஸ்.ராஜ் அவர்கள் தமிழில் மாத இதழாக நடத்திக் கொண்டிருந்த 'மக்கள் மறுவாழ்வு', தாயகம் திரும்பிய மக்கள் படும் இன்னல்களைத் தொடர்ந்து பிரகடனம் செய்தது.

வள்ளி கணபதிப்பிள்ளை அவர்கள் அம்ஸ்டர்டாம் ஃபிறீ யுனிவர்சிட்டி(Free University)யில் கலாநிதிப்பட்ட ஆய்வுக்காகச் சமர்ப்பித்த Repatriation or Deportation?(2005) என்ற ஆய்வேடு மலையகத் தமிழர்கள் தாயகம் திரும்ப நேர்ந்த நிலையை மிக நுணுக்கமாக ஆராயும் நூலாகும்.

தாயகம் திரும்பிய தமிழகன் என்ற வழக்கறிஞர் எழுதிய 'களுகங்கையிலிருந்து காவிரிவரை' (2023) என்ற சுயசரிதை நூல், வாழ்வின் அதலபாதாளத்தில் வீழ்ந்து நொறுங்குண்ட வாழ்வு பற்றிப்பேசுகிறது.


ஜெயசிங்

இந்த வரிசையில் தமது இருபத்தேழு வயதில் இலங்கையிலிருந்து தமிழகம் திரும்பிய S.Z.ஜெயசிங், நாற்பத்தேழு ஆண்டுகளின்பின் தான் வாழ்ந்த அந்த மரகதப் பூமியைத் தரிசித்து மீள்வதை, அனுபவப்பகிர்வாகப் பதிவு செய்திருக்கும் 'மீண்டும் தேயிலை வாசம்' என்ற நூல் சென்றொழிந்த காலத்தின் சோகத்தைப் பாடுகிறது.

தன் வாழ்வின் வசந்தத்தை, இங்குருகல்ல தோட்டத்திலிருந்து பட்டித்தலாவ தமிழ்ப் பாடசாலைக்கு ஒற்றையடிப்பாதை வழியே, ஆறு வருடங்களாக தினமும் நான்கு கிலோ மீட்டர் தொலைவு நடந்து சென்று படித்து, பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பயின்று, அங்கேயே உதவி விரிவுரையாளராகவும் திகழ்ந்த அந்தச் சொப்பன வாழ்வைத் தொலைத்துவிட்டு, 'தாயகம்' என்று தான் அறிந்தேயிராத அந்நிய நாட்டுக்குச் செல்வதைப்போல, தலைமன்னாரில் 'ராமானுஜம் ' கப்பலில் ஏறித் தமிழகம் நோக்கிப்பயணித்த சோகத்தை இந்த நூலில் இசைக்கிறார் ஜெயசிங். நாற்பத்தேழு ஆண்டுகள் கழித்து, தலைமன்னாரின் கப்பல்துறையில் தான் பயணித்த ரயில் தண்டவாளம் உடைந்து, உருக்குலைந்து, துருப்பிடித்துக் கிடப்பதைப் பார்த்துக் கண்ணீர் மல்கும் ஜெயசிங்கின் மென்மையான இதயத்தின் தாபத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையை விட்டு அவர் வெளியேறிய பின், ஒரு ஐம்பது ஆண்டு கால எல்லைக்குள் இலங்கை இரத்த வெள்ளத்தில் முக்குளித்திருக்கிறது. கொடூர இனவன்முறைகள், தென்னிலங்கையில் நிகழ்ந்தேறிய பயங்கரவாதம், வடக்கே முப்பதாண்டுகள் நடந்த விடுதலைப் போராட்டங்கள் என்று தேசத்தின் மேனியில் இரத்தச் சேறு அப்பியிருந்தது.

தென்னிலங்கையின் இனவன்முறையால் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் என்று மலையக மக்கள் திக்கற்று, திசைகெட்டு, துயர் சுமந்து வாழ்ந்த கோலத்தை ஜெயசிங் தரிசிக்கிறார். தமிழ்ப் பிராந்தியம் என்று சென்று சேர்ந்த இடத்திலும் வேண்டாதவர்களாக அந்த அப்பாவி மக்கள் கணிக்கப்பட்ட கதையை அவர் எல்லா இடத்திலும் கேட்க நேர்கிறது. முப்பத்திரண்டு வயதில், வாழ்விடம் தேடி, மீண்டும் கூலி வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட மயில்வாகனத்தின் போராட்டமே வாழ்வாகிப் போய்விட்டதுயர்க்கதையை ஜெயசிங் தன் நூலில் பதிவு செய்கிறார்.


மலையகத்தைச் சுற்றிவரும் ஜெயசிங், தங்கள் குழந்தைகளை விட்டுவிட்டு, கொழும்பில் வீட்டுப் பணிப்பெண்களாக வேலை பார்க்கச் செல்லும் தாய்மார்களின் சோகங்களைச் சந்திக்கிறார். இன்னும் புத்தகப் பொதிகளைச் சுமந்து, தோட்டத்துப் பாதைகளில் மலையகத்தின் இளம் பிஞ்சுகள் மைல் கணக்கில் பள்ளிகளுக்கு நடந்து செல்லும் காட்சிகள் ஜெயசிங்கின் சிறுபிராய வாழ்வை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. மாற்றம் எங்கே? என்ற கேள்விகள் அவரது சிந்தனையில் எழுகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான உதவி விரிவுரையாளராக இருந்தபோது ஜெயசிங் எழுதிய 'இலங்கைவாழ் இந்தியர்களின் குடிஅகல்வு' (1977) என்ற நூல் வெளியாகி, கிட்டத்தட்ட அரைநூற்றாண்டினைத் தொடமுயலும் வேளையில், அவரது மூன்றாவது நூலாக 'மீண்டும் தேயிலையின் வாசம்' என்ற நூல் வெளியாவது ஜெயசிங்கின் மலையகம் மீதான இடையறாத ஈடுபாட்டை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஜெயசிங்கின் வாழ்வின் 36 வீதத்தை, தன் இளமை வாழ்வை இலங்கையில் கழித்து, மீதமுள்ள அவரின் வாழ்வு, 64 வீதம் தமிழகத்திலே கழிந்து முடிகிறது. இன்று அவர் தம்மை நெல்லை ஜெயசிங் என்று அழைத்துக் கொள்கிறார்.

தாயகம் திரும்பிய தமிழர்களின் வரலாற்றில் பொது வகைப்பாட்டில் அடக்கமுடியாத ஓர் ஆளுமையாகத் திகழும் ஜெயசிங் தம் அறிவார்ந்த அனுபவத்தின் பலத்தில் மேலும் பல நூல்களை அளித்திட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

மு.நித்தியானந்தன்...
லண்டன்



# மஜ்மாநகர் கிராமத்தில் பள்ளிவாசல், பல்துறைக் கட்டடம் நிர்மாணித்த ஸவாஹிர் குடும்பத்தின் பணி பாராட்டுக்குரியது

## வடமேல் மாகாண முன்னாள் ஆளுநர் நஸீர் அஹமட் வாழ்த்து



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓட்டமாவடி மஜ்மாநகர் கிராமத்தில் அமைந்துள்ள கொரோனா மையவாடியில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாயல் மற்றும் பல்துறை கட்டட நிர்மாணம் மிகப் பாராட்டத்தக்க ஒரு நிகழ்வாகும்.

2021 ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் பரவிக்கொண்டிருந்த கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டு மரணித்தவர்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வது தொடர்பில் அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டே நாங்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொண்டிருந்தோம். அதன் பலனாக, ஓட்டமாவடி மக்களின் அன்பார்ந்த அன்பளிப்பாக கிடைத்த மஜ்மாநகர் காணியில் பௌத்த, கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் என்ற வேறுபாடின்றி 3634 பேரின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி கொரோனா தொற்றினால் காலமான பேருவளை, சீனன்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைரா ஸவாஹிரின் ஞாபகார்த்தமாக, தற்போது மஜ்மாநகரில் ஒரு பள்ளிவாயல் மற்றும் பன்னோக்கு கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. சீனன்கோட்டையைச் சேர்ந்த பிரபல மாணிக்க வர்த்தகர் மர்ஹூம் அப்துல் வதூத்-ஜமீலா உம்மா தம்பதிகளின் புதல்வியான ஜனாபா மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைரா ஸவாஹிரின் ஞாபகார்த்தமாக அவரது கணவர் ஏ.இஸட். எம் ஸவாஹிர் மற்றும் பிள்ளைகளினால் 'பைத்துல் ஹைராத்' என்ற நாமத்துடன், அழகிய தோற்றத்தோடு, அனைத்து வசதிகளுடனும் இப்பள்ளிவாயல் மற்றும் பன்னோக்கு கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டவர்களின் உறவுகளுக்கும் பொதுமக்கள் பாவனைக்குமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.



பேருவளை ஸவாஹிர் குடும்பத்தின் இந்த முன்மாதிரி பெரும் பாராட்டுக்குரியதாகும். மிகச்சிறந்த மனிதாபிமான செயற்பாடொன்றை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். ஸதகதுல் ஜாரியாவின் மிக உயர்ந்த செயற்பாடுகளில் ஒன்றாகவே இதனைக் கருத முடிகின்றது. இந்த மஜ்மா நகர் மையவாடியில் கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வது தொடர்பான நடவடிக்கைகளில் ஆரம்பம் தொட்டு பல்வேறு வழிகளிலும் பங்களிப்புகளை வழங்கிய அனைவரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூர விரும்புகின்றேன்.

அவர்களுடைய தியாகம், அர்ப்பணிப்பு காரணமாகவே நாங்கள் அரசியல் ரீதியாக மேற்கொண்ட முயற்சிகள் சிறப்பான முறையில் பலனளித்தது என்பதை சுட்டிக் காட்ட வேண்டும்.

ஸவாஹிர் அவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# அணு ஆயுதப் போர் உருவெடுக்குமா?

## இரு யுத்தங்கள் தீவிரமடைவதால் உலகப்போர் மூளும் அபாயம்!



காஸா, ஈரான், லெபனான், சிரியா, யெமன் மற்றும் இஸ்ரேல் போர் உச்சம் அடைந்துள்ளது. இது உலகப்போராக மாறும் அபாயம் உள்ளது. முக்கியமாக இந்தப் போர் அணு ஆயுதப் போராக மாறும் அபாயமும் உள்ளது.

ஏற்கனவே உக்ரைன் - ரஷ்ய போர் ஒரு பக்கம் தீவிரமாக நிற்காமல் நடந்து கொண்டு இருக்கிறது. இன்னொரு பக்கம் இஸ்ரேல்-பலஸ்தீன போர் தொடருகின்றது. இரண்டு போருமே கண்டிப்பாக நீண்ட கால போராக இருக்கும். நீண்ட காலப் போரின் பின்விளைவுகள் இந்தப் போரின் மூலம் ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது.

அமெரிக்கா - ரஷ்யா இடையே 1960களில் நடைபெற்ற பனிப்போருக்குப் பின்பாக மிக மோசமான மோதல் தற்போது ஏற்பட்டுள்ளது. இதுவரை இல்லாத அளவிற்கு அமெரிக்கா - ரஷ்யா இடையிலான உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் உக்ரைன்.

உக்ரைன் நேட்டோ படையில் இணைய விரும்பியது. இதற்காக முயற்சிகளை செய்தது. சோவியத் யூனியன் ஒன்றாக இருந்த போது ரஷ்யாவும் உக்ரைனும் ஒன்றாக இருந்த நாடுகள் ஆகும். அதன்பின் 1991 டிசம்பரில் சோவியத் யூனியன் உடைந்த போது, உக்ரைன் தனியாகப் பிரிந்தது. இப்படிப்பட்ட நிலையில் உக்ரைன் நேட்டோவில் இணைந்தால் அது ரஷ்யாவிற்கு ஆபத்து. ஏற்கனவே ரஷ்யாவைச் சுற்றி இருந்த பெரும்பாலான பழைய சோவியத் நாடுகள் அமெரிக்காவின் நேட்டோ படையில் இணைந்து விட்டன.

இதில் உக்ரைனும் இணைந்தால் அது ரஷ்யாவிற்கு பெரிய சிக்கலாகும். பாதுகாப்பு ரீதியாக ரஷ்யாவிற்கு நேட்டோ வைக்கும் பொறியாக இது அமைந்து விடும். இதனால் உக்ரைனை நேட்டோ படையில் சேர விடாமல் தடுக்க ரஷ்யா தீவிர முயற்சி எடுத்து வருகிறது. உக்ரைன் அமெரிக்காவின் முழு நேர நட்புநாடு ஆவதற்கு முன்னர் அதை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற திட்டத்தில் ரஷ்யா இருக்கிறது. ஏனென்றால் ரஷ்யாவின் பெரும்பாலான எல்லையை உக்ரைன்தான் மூடி நிற்கிறது. இதற்காக முதலில் உக்ரைனை கட்டுப்படுத்தி ரஷ்யா நிழல் இராச்சியம் நடத்தியது. ஆனால் அதன்பின் ரஷ்யாவிற்கு ஆதரவாக இருக்கும் அரசியல் தலைவர்களை உக்ரைன் மக்கள் தூக்கி வீசினார்கள்.

இந்த நிலையில்தான் உக்ரைனில் தற்போது கடந்த ஒன்றரை வருடமாக ரஷ்யா போர் செய்து வருகிறது. போர் காரணமாக உக்ரைன் நேட்டோவில் இணைய முடியாது. அதேசமயம் இந்தப் போர் முடியாமல் அப்படியே நீடிக்கும். இதில் நேட்டோ நேரடியாக தலையிட்டால் அது உலகப்போராக வெடிக்கும். உக்ரைனுக்கு அமெரிக்கா ஆயுத உதவிகளை செய்து வருகிறது. இன்னொரு பக்கம் ரஷ்யாவிற்கு ஆதரவாக சீனா இருப்பதால் போர்ச் சூழல் மோசமாகும் என்ற அச்சம் உள்ளது.



இது தவிர இப்போது பலஸ்தீனம்-இஸ்ரேல்-ஈரான் மோதல் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் - பலஸ்தீன போருக்கு முக்கியமான காரணம் நிலத்தகராறு. அதாவது பலஸ்தீனம் இருந்த இடத்தில்தான் தற்போதைய இஸ்ரேல் கட்டமைக்கப்பட்டுள்ளது. 1947 இல் இருந்து பலஸ்தீனத்தை கொஞ்சம் கொஞ்சமாக இஸ்ரேல் ஆக்கிரமித்து வந்தது. தற்போது மீதம் இருக்கும் காஸா பகுதியையும், ஜெருசலேமின் வெஸ்ட் பேங்க் பகுதிகளையும் கைப்பற்றும் முடிவில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேல் அதிகாரத்தை எதிர்க்கும் தனிப்பகுதிதான் காசா. இதில் இருந்து இஸ்ரேல் முன்பே வெளியேறிவிட்டது. காரணம் இங்கே உள்ள ஹமாஸ் அமைப்பு. இந்த ஹமாஸ் அமைப்பும் இஸ்ரேலும் தான் தற்போது பலஸ்தீனத்திற்காக சண்டை போட்டுக்கொண்டு இருக்கின்றன. இப்போது இந்த விவகாரத்தில் லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா தாக்குதல், ஈரான் மேற்கொண்ட தாக்குதல் என்று இஸ்ரேல் கடுமையான தாக்குதல்களை எதிர்கொண்டு வருகிறது.

இந்த இரண்டு நாடுகளைச் சேர்த்து தற்போது மொத்தம் 8 நாடுகள் போரில் நேரடியாகத் தலையிட்டுள்ளன. இதில் ரஷ்யா, சீனாவும் தலையிட்டுள்ளன. இரண்டு நாடுகளுமே பலஸ்தீனம் என்ற தனிநாட்டை உருவாக்க வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளன. இது மூன்றாம் உலகப்போராக வெடிக்கலாம் என்ற அச்சம் உள்ளது.

ஏனென்றால் இரண்டு போர்கள் ஒரே நேரத்தில் நடக்கின்றன. இரண்டு போர்களிலும் அமெரிக்கா தலையிட்டுள்ளது. ஒன்று ரஷ்ய போர், இன்னொன்று இஸ்ரேல் போர். இரண்டுமே கொள்கை, நில ரீதியாக கடுமையான போர். பல நாடுகள் இதில் தலையிட்டுள்ளன. இந்தக் காரணங்களுக்காக மூன்றாம் உலகப்போர் வெடிக்கலாம். அணு ஆயுதப் போராக இது உருவெடுக்கும் அச்சமும் உள்ளது.

உக்ரைனை மண்டியிட வைக்க ஏற்கனவே ரஷ்யா அணு ஆயுதத்தை எடுக்கும் திட்டத்தில் உள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் வெளியாகியிருந்தன.

மறுபுறத்தில் ஹமாஸை மொத்தமாக தலைமுறை தலைமுறையாக அழிப்போம் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அதனால் அவர்களும் கூட அணு ஆயுதத்தைப் பயன்படுத்தலாம் என்ற அச்சம் உள்ளது. இதனால் இந்த போர் அணு ஆயுத போராக மாறினாலும் ஆச்சரிப்படுத்துவதற்கு இல்லை என்கிறார்கள் இராணுவ ஆய்வாளர்கள்.

இதேசமயம் இஸ்ரேல் - ஈரான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளதால், மத்திய கிழக்கில் உச்சக்கட்ட பதற்றம் நிலவும் நிலையில், இஸ்ரேல் - ஈரான் இடையேயான இராணுவ பலம் எத்தகையது, இரு நாடுகளிடமும் எத்தனை ஆயுதங்கள் உள்ளன என்ற தகவல்கள் கசிந்து வருகின்றன.

90.43 இலட்சம் மக்கள் தொகை கொண்ட இஸ்ரேலில் இராணுவ வீரர்கள் எண்ணிக்கை மட்டும் 1.70 இலட்சம் ஆகும். அந்த நாடு இராணுவத்திற்கு பெரும் நிதி ஒதுக்குகிறது. இஸ்ரேலிடம் உள்ள போர் விமானங்கள் எண்ணிக்கை 241 ஆகும். பீரங்கிகள் 1,996 உள்ளன. ரொக்கெட் லோஞ்சர்கள் 150, போர்க்கப்பல்கள் 67, நீர்மூழ்கிக் கப்பல்கள் 5 உள்ளன. ரோந்துக் கப்பல்கள் 45 உள்ளன.

ஈரானை எடுத்துக்கொண்டால் அந்த நாட்டின் மக்கள் தொகை 8.75 கோடியாகும். இராணுவ வீரர்கள் எண்ணிக்கை 6.10 இலட்சம். இராணுவத்திற்கு பெரும் நிதி ஒதுக்கப்படுகிறது. 186 போர் விமானங்கள் உள்ளன. பீரங்கிகள் 1,370, ரொக்கெட் லோஞ்சர்கள் 775, போர்க்கப்பல்கள் 101, நீர்மூழ்கிக் கப்பல்கள் 19 உள்ளன. ரோந்துக் கப்பல்கள் 21 உள்ளன.

எண்ணிக்கைகள் அடிப்படையில் இஸ்ரேலை விட ஈரான் அதிக ஆயுதங்கள், இராணுவ வீரர்களை கொண்டிருந்தாலும் இஸ்ரேலிடம் அதிநவீன தொழில்நுட்பங்கள் உள்ளன. அது மட்டுமின்றி அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் ஆதரவு இஸ்ரேலுக்கு உள்ளது.

# அடிப்படை வசதிகளின்றி மேசைப்பந்தாட்டத்தில் சாதித்து காட்டிய முனைக்காடு விவேகானந்தா ம.வி

மேசைப்பந்து விளையாட எந்தவிதமான அடிப்படை வசதிகளுமற்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய முனைக்காடு விவேகானந்தா மகாவித்தியாலய மாணவர்கள் சகல வசதிகளும் அடங்கிய நகரப்புற பாடசாலைகளைப் பின்தள்ளி சாதித்துக் காட்டி தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

மேசைப்பந்து விளையாட்டுக்கான எந்தவிதமான அடிப்படை வசதிகளுமற்ற மட்டக்களப்பு முனைக்காடு விவேகானந்தா மகா வித்தியாலய மேசைப்பந்தாட்ட அணிகள் கிழக்கு மாகாண மட்ட சம்பியன்களானதுடன், தேசிய மட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் திருகோணமலையில் இடம்பெற்ற போது மட்டக்களப்பு முனைக்காடு விவேகானந்தா மகா வித்தியாலய மேசைப்பந்தாட்ட 18 வயதிற்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகளும், 16 வயதிற்குட்பட்ட பெண்கள் அணியும் முதலிடம் பெற்று சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டியில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி மூன்றாமிடத்தையும், 20 வயதுக்குட்பட்டோருக்கான தனிப்பட்ட வீராங்கனைகளுக்கான போட்டியில் இப்பாடசாலை மாணவி எம். நிவேதிதா சம்பியனானதுடன் 20 வயதுக்குட்பட்டோருக்கான தனிப்பட்டோருக்கான ஆண்கள் பிரிவில் கே.சுஜிரன் இரண்டாமிடத்தையும் பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கும் முனைக்காடு விவேகானந்தா மகாவித்தியாலயத்திற்கும் முனைக்காடு கிராமத்திற்கும் பெருமையினை தேடிக்கொடுத்திருக்கின்றனர்.

மேசைப்பந்தாட்ட விளையாட்டுக்கென தனித்துவமான வசதிகளுடன் பயிற்சிகளை பெற்று பல வசதிகளுடன் இருக்கும் உள்ளக அரங்குகளிலே இரவுபகலாக பயிற்சியினை பெற்று போட்டியில் கலந்துகொண்ட வீர வீராங்கனைகளை ஒரு கஷ்ட பிரதேச பாடசாலையாக இருந்து மேசைப்பந்தாட்டத்திற்கான உள்ளக அரங்கோ தனித்துவமான ஆடுகள மேசையோ இல்லாது பயிற்சிகளை பெற்ற முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலய அணி கிழக்கு மாகாணத்தில் சகல



வசதிகள் கொண்ட பிரபல பாசாலைகளை தோற்கடித்திருக்கிறது என்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

முனைக்காடு விவேகானந்தா மகா வித்தியாலய மேசைப்பந்தாட்ட அணி பாடசாலை மட்டங்களில் மாத்திரமன்றி திறந்த கழகமட்ட போட்டிகளிலும் களம் இறங்கி சாதித்துக்காட்டியிருந்தது.

48 ஆவது தேசிய விளையாட்டு நிகழ்வில் கிழக்குமாகாண சம்பியனாக தெரிவான முனைக்காடு இராமகிருஷ்ணா விளையாட்டுக் கழகத்திற்காக இந்த அணியே களமாடியதுடன், இந்த அணி தேசிய மட்டப்போட்டியில் முதல் சுற்றில் பலம் மிக்க ஊவா மாகாண அணியை தோற்கடித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் மேசைப்பந்தாட்ட விளையாட்டை அறிந்திராத இம்மாணவர்களுக்கு மேசைப்பந்தாட்ட நுட்பங்களை கற்றுக்கொடுத்து தேசிய மட்டம் வரை முனைக்காடு கிராமத்தின் பெயரை ஓங்கி ஒலிக்கச் செய்து கொண்டிருக்கும் உடற்கல்வி ஆசிரியர் நா. சிறிமுருகன் அவர்களை இந்த இடத்தில் பாராட்டுவது பொருத்தமாகும்.

மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும் வித்தியாலய முதல்வர் மா. யோகேந்திரன் மற்றும் பாடசாலை அணிக்கான ஆலோசனைகளுடன் ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரன், மட்டக்களப்பு மேற்கு கல்வி வயத்தில் சதுரங்கம் மற்றும் மேசைப்பந்து போன்ற விளையாட்டுக்களை வளர்த்தெடுக்க செயற்பட்டுக்கொண்டிருக்கும் வலயத்தின் திட்டமிடலுக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் வைத்திய சி. சஜீவன், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் அனுசியா ஆகியோரும் பாராட்டுக்குரியவர்களாவர்.

அத்தோடு இப்பாடசாலைக்கு மேசைப்பந்தாட்ட மேசையினை சொந்த நிதியில் பெற்றுத்தந்த முனைக்காடு கிராமத்தை சேர்ந்த தனபால், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சிறிமுருகன் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## மக்கள் மீதான அழுத்தத்தை...

சந்திப்பு நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஸ்ண ஸ்ரீநிவாசன், (Krishna Srinivasan) சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி கலாநிதி பீற்றர் ப்ரூயர் (Dr. Peter Breuer) உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழுவினர் மற்றும் IMF பேச்சுவார்த்தைகளுக்காக நியமிக்கப்பட்ட இலங்கையின் பிரதிநிதிகள் குழுவினரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை அடைவதற்கும் மக்கள் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கும் மாற்றுத் தீர்வுகள் குறித்து கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க IMF சிரேஷ்ட தூதுக்குழுவினரிடம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியக் குழுவுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையிலான முதலாவது சந்திப்பு நேற்று முன்தினம் (03) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த சந்திப்பின்போது, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களான பேராசிரியர் அனில் ஜயந்த மற்றும் துமிந்த ஹுலங்கமுவ உள்ளிட்ட இலங்கை பிரதான அதிகாரிகள் கலந்து கொண்டதுடன் சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கிடையில் செயற்படுத்தப்படும் தற்போதைய திட்டம் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் நோக்கங்களுடன் கொள்கையளவில் அரசாங்கத்தின் பரந்த உடன்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்திய ஜனாதிபதி, மக்கள் மீதான சுமையை அகற்றும் மாற்று வழிகளின் ஊடாக அந்த நோக்கங்களை அணுகுவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

அதிக வற் வரி மற்றும் வருமான வரியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக் காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கான தற்போதைய ஜனாதிபதியின் அர்ப்பணிப்பைப் பாராட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட மாற்று அணுகுமுறைகள் குறித்து கலந்துரையாடுவதற்கும் உடன்பட்டனர்.

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான வேலைத்திட்டத்தின் மூன்றாவது மீளாய்வை ஆரம்பிப்பது தொடர்பாக இரு தரப்பினரும் கவனம் செலுத்தியதோடு, எதிர்வரும் பொதுத் தேர்தல் காரணமாக சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புள்ள போதும் தடையின்றி இந்தப் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக சர்வதேச நாணய நிதியத்திடம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உறுதியளித்தார்.

## இந்தியா முழுமையான...

வருகைத்தர கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த அவர், ஜனாதிபதிக்கு தனது வாழ்த்தையும் தெரிவித்தார்.

இதன்போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச் செய்தியை ஜனாதிபதியிடம் கையளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர், இந்திய இலங்கை உறவுகளை பல்வேறு துறைகளினூடாக பலப்படுத்திக்கொள்வது குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்தார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை, முதலீடுகள், மின்சக்தி மற்றும் வலுசக்தி, பால் சார்ந்த உற்பத்தித் துறை என்பவை தொடர்பாக இந்தியா கொண்டிருக்கும் அக்கறையை வலியுறுத்திய அவர், இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்குமெனவும் தெரிவித்தார்.

அதற்கமைய, இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்காக இந்தியாவின் பாரிய சந்தை வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது, அண்மையில் இலங்கை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியின் போது, இந்தியா வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்தியாவுடனான தொடர்புகளை தொடர்ந்தும் பேணுவதில் ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மீன்பிடித்துறை மற்றும் தேசிய ஒற்றுமை போன்ற இரு தரப்பும் அக்கறை காட்டும் விடயங்கள் தொடர்பாகவும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதனையடுத்து, வெகு விரைவில் இந்தியாவுக்கான சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதிக்கு கூறியதை தொடர்ந்து, இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு வருகைத்தர வேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அழைப்பு விடுத்தார்.

## கட்சியின் தேசிய சபையில்...

பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். கொழும்பு ப்ளவர் வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் அலுவலகத்தில் நேற்று(04) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜீவன் தொண்டமான் இதனை குறிப்பிட்டார்.

## இன்னும் இரண்டு வாரங்களில்...

வெளியாகியுள்ளன. அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்ததுள்ளமையினால் அதன் பலனை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்கவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, பொருட்களின் விலைக் குறைப்பு தொடர்பான வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை தமிழரசுக் கட்சி...

இணைந்துக்கொள்ள விரும்புவோரை இணையுமாறு பொதுவான அழைப்பை விடுத்துள்ளோம். இதில் இணைந்துக்கொள்வதற்கு மாவை சேனாதிராஜாவுக்கும் அழைப்பு விடுத்திருந்தோம்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியென்பது, ஐந்து கட்சிகள் சேர்ந்த கூட்டமைப்பாக காணப்படுகின்றது. தமிழரசு கட்சி தனித்து செயற்படுகின்றது. அவர்கள் எமது கூட்டமைப்புடன் இணைவது தான் சரியானது. அதனை விடுத்து, தங்களிலிருந்து பிரிந்து போனவர்களை மீள வருமாறு அழைப்பது சரியானதல்ல.

ஆகவே, ஐக்கியத்தை விரும்பும் பட்சத்தில் அவர்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் ஒருமித்து போவதே சரியானது. தம்மிலிருந்து பிரிந்து போனவர்களை மீள வருமாறு அழைத்துள்ளனர். அதிலும் யாரை அழைக்கின்றார்கள் என குறிப்பிடவில்லை.

அதுமாத்திரமின்றி, அவர்களுக்கு பொதுச்சின்னமோ பொது கட்சியோ இல்லை. தேர்தல் காலத்தில் மாத்திரம் தமது கட்சியில் தமது சின்னத்தில் போட்டியிடுமாறு கோருகின்றனர். அது சரியானதல்ல.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பதிவு செய்யுமாறு நாம் பல தடவைகள் கோரியும் அதனை செய்யவில்லை. தமிழரசு கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஐக்கியப்பட விரும்பினால் அதனை எமக்கு அறிவிக்கலாம் என அவர் தெரிவித்தார்

## இலங்கைக்கு சர்வதேச சமூகம்...

சந்திப்பையடுத்து, பின்னர் சீனத் தூதுவரை சந்தித்துள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து அவர் மேற்கு, ரஷ்யா மற்றும் பல நாடுகளின் தூதர்களையும் சந்தித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட எரிக் சொல்ஹெய்ம்,

இது வெளியுறவுக் கொள்கையின் 'இலங்கைக்கு முதலிடம்' என்ற தெளிவான சமிக்ஞையாகும்.

சத்தியப்பிரமாணம் செய்த உடனேயே ஜனாதிபதி கண்டிக்கு சென்று தலதா மாளிகையில் வழிபட்ட பின் மகாநாயக்கர்களின் ஆசி பெற்றார். பின்னர் மதத் தலைவர்களையும் தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். அனைத்து இன சமூகங்களுக்குமாக இலங்கையை உருவாக்க வேண்டும் என்ற அவரது நிலைப்பாடு வலுவாக உள்ளது என்பதை இது எடுத்துக்காடுகிறது.

வணிகத்துறையுடன் நெருக்கமாக பணியாற்றினால் மட்டுமே வளமான இலங்கையை உருவாக்க முடியும் என்பதை சுட்டிக்காட்டும் வகையில், அவர் வணிக சமூகத்தை அணுகியுள்ளார். இதன் மூலம் வறிய மக்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்த தேவையான வளங்களை முன்னெடுக்க உதவ முடியும் என்பதாகும்.

ஊழலற்ற மக்களை அரச அதிகாரத்துக்கு கொண்டுவர முனைந்துள்ளார். அமைச்சர்களுக்கான சொகுசு கார் மற்றும் கொடுப்பனவுகளை குறைப்பதன் மூலம், அரசியல்வாதிகளுக்கு மிகவும் அடக்கமான வாழ்க்கை முறைக்கு வழிகாட்டியுள்ளார்.

காக்கி உடை அணிவது மக்களுக்கு நெருக்கமான ஒரு தலைமைத்துவத்தைக் குறிக்கிறது. இவை எதுவுமே இலங்கையின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்காது. இராஜதந்திரிகள் மத்தியில் ஒரு இடதுசாரித் தலைவரின் மீதான சந்தேகங்களை இது அமைதிப்படுத்தாது.

ஆனால் இது நிச்சயம் நல்ல தொடக்கம். அமைதியான மற்றும் பல இனத்தவர்களுக்கான பசுமையான மற்றும் வளமான இலங்கையைக் கட்டியெழுப்ப அவருக்கு இப்போது உதவவேண்டும் என நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

## முன்னாள் அமைச்சர் பந்துல...

பாராளுமன்ற உறுப்பினராகவும், பிரதி அமைச்சராகவும், அமைச்சராகவும் செயற்பட்டு மக்களுக்கு சேவையாற்றியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஹோமாகம தேர்தல் தொகுதிக்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மக்கள் பிரதிநிதி இல்லாத ஒரு காலகட்டம் இருந்ததாக குறிப்பிட்ட அவர், நகரை அறிவு மைய நகரமாக மாற்ற தன்னால் இயன்ற அனைத்தையும் செய்ததாகவும், அது தனக்கு கிடைத்த மாபெரும் வெற்றி எனவும் கூறினார்.

அடுத்த சில வருடங்களில் மற்றுமொரு பட்டப்பின் படிப்புக்காக நேரத்தை செலவிட திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு திரைப்படத்தை தயாரிப்பதற்கும் தான் திட்டமிட்டுள்ளதாக முன்னாள் அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

## 03ஆவது மீளாய்வு காலம்...

குறைப்பது, இருப்புக்களை அதிகரிப்பது மற்றும் வருமான சேகரிப்பை மேம்படுத்துவது போன்றவற்றினாலான சீர்திருத்த முயற்சிகள் பலன்களை அளிக்கக்கூடியவகையில் அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை 2024 ஆம் ஆண்டின் பிரிவு IV ஆலோசனை மற்றும் இரண்டாவது மதிப்பாய்வை இலங்கையுடனான விரிவாக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் நிறைவு செய்துள்ளதுடன், பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்காக சுமார் 336 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உடனடியாக வழங்கப்பட்டுள்ளன. நிரல் செயற்றின் வலுவாக இருப்பதுடன் பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுத்தல் பணவீக்கத்தை குறைக்கவும், இருப்புக்களை அதிகரித்தல் மற்றும் வருமான திரட்டலை மேம்படுத்தல் போன்ற விடயங்களில் மறுசீரமைப்பு முயற்சிகள் பயனளித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

## குழந்தைகளுக்கு முகக்கவசம்...

அத்துடன், கை, கால் மற்றும் வாய் நோய் போன்ற நோய்களும் குழந்தைகளுக்கிடையே பரவி வருவதாக டொக்டர் தீபால் பெரேரா குறிப்பிட்டார்.எனவே, சரியான சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் குழந்தைகளை பாதுகாக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இன்ஃப்ளூயன்ஸா வைரஸ் பரவுவதால், கடுமையான தொண்டை புண் மற்றும் காய்ச்சலைக் அவதானிக்க முடியும் எனவும், எனவே எப்போதும் முகக்கவசங்களை அணிவது மற்றும் கைகளை சுத்தமாக வைத்திருப்பது மிகவும் முக்கியம் எனவும் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்தார்.

## கேள்விக்குறியாகியுள்ள...

சென்றுகொண்டிருக்கிறது. தமிழ் மக்களிடையே பொதுவாக பேசப்படும் கருத்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழ் அரசியல் தலைவர்கள் எல்லாம் ஒன்றிணைந்து அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதுதான். முக்கியமாக கடந்த ஜனாதிபதி தேர்தலில் தென்பகுதியில் மக்கள் எடுத்த முடிவை சற்று பார்க்க வேண்டும். தமிழர்கள் எப்படி வாக்களித்தார்களோ சிங்களவர்கள் ஒரு தெளிவான நிலை எடுத்திருந்தனர். பல கட்சிகள் ஒன்றிணைந்து கேட்ட வேட்பாளர்களை விட தனித்துவமாக போட்டியிட்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அதிக வாக்குகளை சிங்கள மக்கள் கொடுத்திருந்தார்கள். இந்நிலையில், இன்று எம் முன் எழும் கேள்வி, நாங்கள் ஒன்றிணைய வேண்டும் என்று ஒரு நிலைப்பாட்டில் இருக்கும் அதேவேளையிலே போட்டியிடுபவர்கள் யார்? எங்களது அரசியலில் இன்று வெளிப்படை தன்மை காணப்படவில்லை. ஒருபுறம் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எங்களுடன் வாருங்கள் என்று ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் கூறுகின்றனர். இன்று ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கட்சி தமிழீழத்துக்குள்ளே அரசியலை முன்னெடுத்து செல்கின்றது.

பல நபர்களும் நாங்கள் இன்று அரசோடு இணைவோம் இணைந்து செயற்படுவோம் என்றெல்லாம் கூறுகின்றனர். நாங்கள் தொடர்ச்சியாக தேசியம், உரிமை என்று பேசிவிட்டு எமது மக்களின் தேவைகளையும் புறக்கணிக்க முடியாது” என அவர் குறிப்பிட்டார்.

## ஐ.தே.க.–ஐ.ம.ச. கூட்டணி...

தெரிவித்துள்ளார். இந்தப் பேச்சுவார்த்தை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன ஆகியோரின் பங்குபற்றலுடன் வெற்றிகரமாக நடைபெற்றதாக தெரிவித்த தவிசாளர் இமிதிஹாஸ் பாக்கீர் மாக்கார், இரு கட்சிகளும் இணைந்து கூட்டணி அமைக்குமென்று நம்பிக்கை ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

எனினும், ஐ.தே.க.வின் உயர் மட்ட தலைவர் ஒருவரின் தலையீட்டையடுத்து பேச்சுவார்த்தை முறிவடைந்து அந்த முயற்சி இடைநிறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த பேச்சுவார்த்தையில் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய ஆலோசனையாது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ருவான் விஜேவர்த்தனவுக்கு மாற்றுவது மற்றும் சிரேஷ்ட தலைவராக ரணில் விக்கிரமசிங்க செயற்படுவதாகும் என அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், ரணில் விக்கிரமசிங்க, இந்த ஆலோசனைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மேலும் கூறினார்.

## தங்கத்தின் விலை...

787,908 ரூபாவாகவும் 24 கரட் தங்கம் கிராம் (24 karat gold 1 grams) 27,800 ரூபாவாகவும் பதிவாகியுள்ள அதேவேளை 24 கரட் தங்கப் பவுண் 222,350 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதேபோல 22 கரட் தங்க கிராம் (22 karat gold 1 grams) 25,490 ரூபாவாக பதிவாகியுள்ளதுடன் 22 கரட் தங்கப் பவுண் (22 karat gold 8 grams) 203,900 ரூபாவாக பதிவாகியுள்ளது.

21 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை (21 karat gold 1 grams) 24,330 ரூபாவாக பதிவாகியுள்ளதுடன் 21 கரட் தங்கப் பவுண் (21 karat gold 8 grams) 194,600 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன், கொழும்பு செட்டியார் தெரு தங்க நிலவரங்களின் படி 24 கரட் தங்கப் பவுண் (24 karat gold 8 grams) ஒன்று 208,000 ரூபாவாக பதிவாகியுள்ளது. அங்கு (22 karat gold 8 grams) ஒன்று 192,400 ரூபாவாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விசாரணைகள் நடத்த...

வேண்டுமென கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே பணிப்புரை விடுத்துள்ளார். கணினியின் தரவு சேமிப்பகத்தை (ஹார்ட் டிரைவ்) பொறுப்பேற்று அதை அரசாங்க ஆய்வாளரிடம் சமர்ப்பிக்குமாறும், இது தொடர்பாக விரிவான அறிக்கையைப் பெறுக்கொள்ளுமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரை பிரதான நீதவான் அறிவுறுத்தினார்.

மூன்று விமானங்களின் (பயிற்றுவிப்பாளர்கள்) கொள்வனவு குறித்து பெறுகை பரிவர்த்தனைகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் வழங்கி குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைக்கு உதவுமாறும் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். ஹெலி அசோசியேட்ஸ் இன்டர்நேஷனல் தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் துஷார ஜனக்கவினால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவுக்கமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் விமான கொள்வனவு பரிவர்த்தனைகள் காரணமாக அவரது நிறுவனத்துக்கு 738,000 அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டமை தொடர்பாக குற்றவியல் நம்பிக்கை மீறல் இடம்பெற்றதாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றத்துக்கு அவ்வப்போது முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் பிரதம நீதவான் குற்றப் புலனாய்வுப் பிரிவினரை அறிவுறுத்தியுள்ளார்.

# இன்றைய பலன்கள்
## (05.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.

**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.

**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.

**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.

**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.

**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.

**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சில வற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.

## ஜப்பான், பிரிட்டன் ... (3 ஆம் பக்க தொடர்)

பிரிட்டன் உயர் ஸ்தானிகர் அன்ட்ரூ பேட்ரிக், நாட்டில் நிலையான ஆட்சியைப் பேணுவதன் முக்கியத்துவம், இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து குறிப்பிட்டதுடன், இலங்கையில் ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் உட்பட பல்வேறு கல்வித் திட்டங்களுக்கு பிரிட்டன் ஆதரவளிக்கும் என்று வலியுறுத்தினார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், அமைதியான மற்றும் ஜனநாயகத் தேர்தலை நடத்தி, சுமூகமான ஆட்சி மாற்றத்தை உறுதி செய்ததற்காக இலங்கையைப் பாராட்டுவதாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார். இதனிடையே, கொரிய அரசாங்கத்தின் வாழ்த்துக்களை தெரிவித்த கொரிய குடியரசின் தூதுவர் மியோன் லீ , இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இதேவேளை, இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் அண்டலிப் இலியாஸ், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, இரு நாடுகளின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அண்மைய நிகழ்வுகளில் இருந்து கற்றுக்கொண்ட பெறுமதிமிக்க பாடங்கள் மற்றும் தற்போதைய சவால்களை எதிர்கொள்ளகடந்தகாலஅனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார். நல்லாட்சியின் ஸ்திரத்தன்மைக்கு சுயாதீன ஆணைக்குழுவின் பங்களிப்பையும் பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத் இமாட், பிரதமருக்கு தனது வாழ்த்தை தெரிவித்ததுடன் மாலைதீவில் இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்த விருப்பம் தெரிவித்தார். இதன்போது, மாலைதீவு வழங்கிய தொடர்ச்சியான ஆதரவுக்கு பிரதமர் கலாநிதி அமரசூரிய நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் இந்தியா, ஜப்பான், பிரித்தானியா, அமெரிக்கா, கொரியா, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## UNDP பிரதிநிதி... (3 ஆம் பக்க தொடர்)

இந்த மறுசீரமைப்புகளை சரியான முறையில் மேற்கொள்வதற்காக டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பாக அரச ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டியது அவசியமெனவும், இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலுக்குப் பிரவேசிப்பதற்கு தேவையான திறன் மற்றும் அறிவு கொண்ட அரச அதிகாரிகளை உருவாக்குவதற்கான உதவிளை வழங்குவதற்கு ஐ.நா அபிவிருத்தி வேலைத் திட்டம் தயாராக உள்ளதாகவும் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஜனாதிபதி செயலாளரிடம் உறுதியளித்தார்.

## இலங்கைக்கான... (3 ஆம் பக்க தொடர்)

ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் ஒழிப்புத் திட்டத்துக்கு பாராட்டு தெரிவித்த மார்க் அண்ட்ரூ, அந்த முயற்சிகளுக்கு ஐ.நா தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குமெனவும் உறுதியளித்தார்.

அத்துடன், சமூகத்தில் தேசிய சமாதானத்துக்கான புதிய அரசாங்கத்தின் பூர்வாங்க முயற்சிகளுக்கும் பாராட்டு தெரிவித்த வதிவிட இணைப்பாளர், ஒவ்வொரு தரப்பினருக்கு மத்தியிலும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டு தெரிவித்தார்.

மேலும், நாட்டுக்கு நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமெனவும் இலங்கைக்கான இணைப்பாளர் மார்க் அண்ட்ரூ பிரான்ஸ் உறுதியளித்துள்ளார்.

## அழைப்பை ஏற்றார் ஜனாதிபதி...

மோடியுடனான கலந்துரையாடலுக்காக ஜனாதிபதி அநுர, தனது முதல் உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணமாக புதுடெல்லிக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் கனலி சஞ்சிகை வெளியீட்டு விழா

பருத்தித்துறை விசேட நிருபர்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் கனலி மாணவர் சஞ்சிகை ஐந்தாவது இதழ் வெளியிடும் நிகழ்வானது ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறீ சங்கீர்த்தனன் தலைமையில் நேற்றையதினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (04) காலை 9.30 மணி தொடக்கம் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும் கலந்து கொண்டனர். சஞ்சிகையை கலைப்பீட பீடாதிபதி சி.ரகுராம் வெளியிட முதல் பிரதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பெற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம்பெற்ற இச்சஞ்சிகை வெளியீட்டில் மாணவர்களுக்கான வாழ்த்துரையினை ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர் அனுதர்ஷி கபிலனும், சஞ்சிகைக்கான கருத்துரைகளை தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம் ஆகியோரும் வழங்கினர். ஊடகக் கற்கைகள் துறையின் மூன்றாம் வருட மாணவர்களால் உருவாக்கப்பட்ட கனலி சஞ்சிகையானது முழுக்க முழுக்க மாணவர்களின் ஆக்கங்களை தாங்கியே வெளிவருவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் ஊடகக்கற்கைகள் துறை விரிவுரையாளர் அனுதர்ஷி கபிலன், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## வடக்கின் உதயம்

# யாழில் தொலைபேசி விளையாட்டுக்கு அடிமையான மாணவன் உயிர்மாய்ப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி விளையாட்டுக்கு அடிமையான பாடசாலை மாணவன் ஒருவன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளதாக மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரை அண்டிய பாடசாலை ஒன்றில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவனொருவன், தொலைபேசி விளையாட்டுக்கு அடிமையாகி, கடந்த மூன்று மாத கால பகுதிக்கு மேலாக பாடசாலைக்கு செல்லாது, வீட்டில் இருந்து தொலைபேசி விளையாட்டில் ஈடுபட்டு வந்துள்ளார்.

மாணவன் பாடசாலைக்கு மூன்று மாத காலப்பகுதிக்கு மேலாக சமூகமளிக்காததால், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோரின் கவனத்திற்கு கொண்டு சென்று, மாணவனை பாடசாலை அனுப்புமாறு அறிவுறுத்தியுள்ளனர். அதனால், தந்தை மாணவனின் கையடக்க தொலைபேசியை பறித்து வைத்துள்ளார்.

அதனால் கோபமடைந்த மாணவன் வீட்டை விட்டு கடந்த 25ஆம் திகதி வெளியேறி சென்றுள்ளான்.

மாணவன் மீண்டும் வீடு திரும்பாததால், பெற்றோர் அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

அந்நிலையில் கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் வசிக்கும் மாணவனின் உறவினர் ஒருவர், தனது வீட்டிலேயே மாணவன் தங்கி இருந்ததாக கூறி மாணவனை அவனது பெற்றோரிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

அந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை மாணவன் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளான்.

மரண விசாரணைகளை மேற்கொண்ட, பின்னர் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் மாணவனின் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

# வவுனியாவில் மருத்துவ பீடம் அமைக்க முக்கிய பங்குதாரர்களின் கலந்துரையாடல்



வவுனியாவில் மருத்துவ பீடமொன்றை அமைப்பது தொடர்பில் முக்கிய பங்குதாரர்களின் கலந்துரையாடல் ஒன்று வவுனியா பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பில் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் முக்கிய அதிகாரிகள் கலந்துகொண்டனர். இந்த முயற்சியை நோக்கிய ஒரு முக்கிய படியாக இது அமைந்ததாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை இயக்குனர், கலாநிதி சுகுணன் குணசிங்கம் தெரிவித்தார்.





யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு 4 மில்லியன் ரூபா பெறுமதியான கண்சிகிச்சை உபகரணங்கள் நேற்று அமரர் திருமதி சீலா சுகுமார் ஞாபகார்த்தமாக எங்கள் மதிப்புக்குரிய திரு. கணேசன் சுகுமார் (Sugshe group of companies, சரவணபவன் உணவகம் கனடா) அவர்களினால் வழங்கப்பட்டது.

பருத்தித்துறையில் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவிக்கும் பொதுக்கூட்டத்தில்

# வடக்கு மாகாண கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி மகஜர் கையளிப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)



புதிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் பருத்தித்துறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுக்கு ஆதரவாக, பருத்தித்துறை கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டம் கொட்டடி கடற்கரையில கடந்த (03) வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெற்றது.

வட மாகாண கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில், எல்லைதாண்டி வரும் இந்திய இழுவை படகுகளை தடுத்து நிறுத்த வேண்டும், சுருக்குவலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்களை நிரந்தரமாக தடைசெய்ய வேண்டும், போதைப்பொருள் ஒழிப்பு, 16 வயது வரை கட்டாய கல்வி உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகள் அடங்கிய மகஜர், இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அநுர குமார திசநாயக்கவுக்கு வட மாகாண மீனவர்கள் சார்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் வழங்கிவைக்கப்பட்டது.

இப்பொதுக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர், சர்வமதத் தலைவர்கள், வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவர்கள் என பலர் பங்கேற்றிருந்தனர்.

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சங்கு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும்

(யாழ். விசேட நிருபர்

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சங்கு சின்னத்தில் வடக்கு கிழக்கு தவிர்ந்து கொழும்பிலும் இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றைய தினம் வியாழக்கிழமை ஊடகங்களை சந்தித்த போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பதிவு செய்த கட்சியாக இருந்தமையால் குத்துவிளக்கு சின்னம் இருந்தது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பொது கட்டமைப்பு ஒன்றினை நிறுவி இருந்தோம். அதனை தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் சேர்ந்தே நிறுவி பொது வேட்பாளராக அரியநேத்திரனை நிறுத்தினோம்.

அதற்கு சங்கு சின்னம் எமக்கு ஒதுக்கப்பட்டது. அந்த சங்கு சின்னத்திற்காக நாம் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக உழைத்துள்ளோம். அதன் அடிப்படையில் சங்கு சின்னத்திற்கு ஜனாதிபதி தேர்தலில் 2 இலட்சத்திற்கும் அதிகமாக வாக்குகள் கிடைக்கப்பெற்றன

பொது கட்டமைப்பின் ஒரு அங்கமாக தமிழ் கட்சிகள் இருந்தமையால், இந்த தேர்தல் சின்னமாக சங்கினை மாற்றுமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கடிதம் மூலம் கோரினோம்

அந்த கடிதம் பொதுக்கட்டமைப்பில் உள்ள தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் பொது சபை என்பவற்றின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தான் கடிதம் எழுதினோம்.

அந்த கோரிக்கையை தேர்தல் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டு எமக்கு சங்கு சின்னத்தை தந்துள்ளார்கள். இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் நாங்கள் சங்கு சின்னத்தில் வடக்கு கிழக்கு தவிர்ந்து கொழும்பிலும் போட்டியிடுவோம் என மேலும் தெரிவித்தார்.

# மாற்றுத்திறனாளி இருவருக்கு மின்சார சக்கர நாற்காலி வழங்கி வைப்பு

ஓமந்தை விஷேட நிருபர்



இடுப்புக்கு கீழ் இயங்காத மாற்றுதிறனாளி இருவருக்கு மின்சாரத்தில் இயங்கும் சக்கரநாற்காலி நேற்றையதினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் சக்கரநாற்காலி இன்மையால் சிரமத்திற்குட்பட்டிருந்தனர். அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக சமூக நலனுக்காக சேவைகளை வழங்கி வரும் நோர்த் ஈஸ்ட் பீப்பிள் வெல்பெயார் அஷோசியேசன் (North East People's Welfare Association) தொண்டு நிறுவனத்தினால் மின்சார சக்கர நாற்காலிகள் திருகோணமலை, கிளிநொச்சியை சேர்ந்த இருவருக்கு நேற்றையதினம் (04.10.2024) காலை ஏ9 வீதி மாங்குளம் எரிபொருள் நிலையத்திற்கு அருகாமையில் வைத்து வழங்கப்பட்டது. இந்த மின்சார சக்கர நாற்காலிகள் அன்றாட வாழ்வில் மிகப் பெரிய உதவியாக இருப்பதுடன், அவர்களின் இயல்பான செயற்பாடுகளை மிகச் சுலபமாக்குவதற்கும் முக்கிய பங்காற்றும். நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் இந்த நலத் திட்டத்தின் மேன்மையை பாராட்டி, சமூக சேவையில் நிறுவனத்தின் பங்களிப்பு சிறப்பானது என்று கூறினர்.

நிர்வாக பொறுப்பாளர் சத்தியசீலன் சத்தியராஜ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மாற்றுதிறனாளி அமைப்பினர், நிறுவன ஊழியர்கள், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மாதர் சங்கத்தினர், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு நாள் விழா

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு நாள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சர்வமத நிகழ்வுடன் கொண்டாடப்படவுள்ளது.

பொன் அகவை நிறைவு நாளான அன்று பல்கலைக்கழகத்தில் உள்ள இந்து மாமன்றம், பௌத்த சகோதரத்துவ சமூகம், கத்தோலிக்க மாணவர் மன்றம் மற்றும் முஸ்லீம் மஜ்லிஸ் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பல்வேறு மதப் பிரார்த்தனைகள் இடம்பெற்று, கைலாசபதி கலையரங்கத்தில் கூட்டு மத நிகழ்வு இடம்பெறவிருக்கிறது.

அன்றைய தினம் காலை 06 மணிக்கு இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், விசேட பூஜை, சிறப்பு வழிபாடுகளும், பௌத்த சகோதரத்துவ சமூகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச மத்திய நிலையத்தில் பௌத்த மதப் பிரார்த்தனைகளும், காலை 06 மணிக்கு கத்தோலிக்க மாணவர் மன்ற ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக நல்லாயன் நிலையத்தில் விசேட ஆராதனைகளும், பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள இஸ்லாமியத் தொழுகை நிலையத்தில் இஸ்லாமிய மதப் பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார நுழைவாயில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

தொடந்து பல்கலைக்கழக நலச் சேவைகள் கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சர்வமத நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக 1974 அக்டோபர் 06ஆம் திகதி இலங்கையின் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பொன் விழா நிகழ்வுகள் கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றன. பொன் விழாவையொட்டி பல்கலைக்கழகத்தினால் ஆய்வு மாநாடுகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் என்பன ஒழுங்குபடுத்தப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் ஒரு அங்கமாக ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் மாநாடும், முத்தமிழ் விழாவும் எதிர்வரும் 07 ஆம், 08 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



# முதியோர் தினத்தை முன்னிட்டு உலர் உணவுப் பொதி வழங்கல்

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ் மாவட்ட நவமங்கை நிவாசத்தினால் சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு 30 முதியோருக்கு உலர் உணவு பொதி வழங்கும் நிகழ்வும், 8ஆம் திகதி நடைபெறும் முதியோர் தினவிழாவுக்கு அன்பளிப்பு செய்வதற்காக மாவட்ட சமுக சேவையாளரிடம் 25 சாறிகள் வழங்கும் நிகழ்வும் நேற்று கோப்பாய் நவமங்கை நிவாசத்தில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோன், யாழ் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் சிவசிறி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர். ச.லலீசன் கல்விமான்கள், சமுக சேவை அதிகாரிகள், கிராமஅலுவலர்கள், நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர்.

# கோப்பாயில் சர்வதேச ஆசிரியர் தின விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர் மன்றம் நடத்தும் சர்வதேச ஆசிரியர் தின விழா இன்று 05.10.2024 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் பிரதி முதல்வரும் இலங்கையின் புகழ் பூத்த நடனத்துறை விற்பன்னருமாகிய கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

# கிழக்கின் குரல்



## மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் நேற்று நாடளாவியரீதியில் ஆரம்பமானது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் நேற்று நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகியது.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று வேட்பு மனுக்கள் ஏற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவித்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான திருமதி ஜே.ஜே முரளிதரன் தெரிவித்தார்.



மாவட்டத்தில் 15ற்கும் மேற்பட்ட சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. நேற்று முதலாவது நியமன பத்திரம் தாக்கல் செய்யும் நடவடிக்கை நடைபெற்றது. மோகன் டிலான் என்பவரின் தலைமையில் வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்வற்காக எட்டு பேர் போட்டியிடுகின்றனர். நான்கு இலட்சத்தி 49,686 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மட்டக்களப்பு பட்டிருப்பு கல்குடா ஆகிய தேர்தல் தொகுதிகளில் தேர்தல்கள் நடைபெறவுள்ளன

442 வாக்கு அளிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. வேட்பு மனுத் தாக்கல் நடவடிக்கை ஆரம்பமானது தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## ஜனாதிபதி சூழலியல் வெள்ளி விருதை வென்ற கல்முனை ஆதார வைத்தியசாலை

### டொக்டர் ரங்க சந்ரசேன தலைமையில் பாராட்டு விழா!

( காரைதீவு குறூப் நிருபர்)

ஜனாதிபதி சூழலியல் வெள்ளி விருதை வென்ற கல்முனை ஆதார வைத்தியசாலையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (4) வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் பணிப்பாளர் டொக்டர் ரங்க சந்ரசேன தலைமையில் நடைபெற்றது.




பிரதம அதிதியாக. மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரும் ,கிழக்கு மாகாண பதில் மாகாண சுகாதார சேவை பணிப்பாளரும், கல்முனை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி டொக்டர் இரா.முரளீஸ்வரன் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் ஆன்மீக அதிதிகளாக சிவஸ்ரீ கோபாலநிரோஷன், பற்றிமா தேசிய கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ. றெஜினோல்ட் கலந்து சிறப்பித்தனர்.

வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் தாஹிறா சபியுடீன்,பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.இராஜேந்திரன்,கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன்( சாய்ந்தமருது ) டாக்டர் என்.ரமேஸ்( கல்முனை வடக்கு), கணக்காளர் எம்.கேந்திரமூர்த்தி, சிரேஷ்ட ஊடகவியலாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நிகழ்வின் அனுசரணையாளர் சரவணாஸ் உரிமையாளர் என்.பிரகலதன், கல்முனை நெற் பி.கேதீஸ் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.

## தீ விபத்து மீட்பு பிரிவுக்கான வாகனம் அன்பளிப்பு



காத்தான்குடி நகரசபைக்கு கொழும்பு மாநகர சபையினால் தீ விபத்து மீட்பு பிரிவுக்கான வாகனமொன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

காத்தான்குடி நகரின் நீண்ட கால தேவையாக தீயணைப்பு இயந்திரம் காணப்பட்டது

கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணீ ஜயவர்தன அவர்களால் காத்தான்குடி நகர சபை கணக்காளர் அஹ்ஸன் தலைமையிலான குழுவினரிடம் கையளிக்கப்பட்டது.

இதற்காக கடந்த நகரசபை பதவிக்காலத்தில் பாடுபட்ட முன்னாள் நகர முதல்வர் உள்ளிட்ட சபை உறுப்பினர்களுக்கும் இதற்காக பல வழிகளிலும் முயற்சித்த அனைவருக்கும் காத்தான்குடி நகர சபையின் செயலாளர் றிப்கா ஷபீன் நன்றி தெரிவித்துள்ளார்.

## ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சரஸ்வதி சிலை திறந்து வைப்பு!





மட்/மட்/ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முத்தமிழ் தாயான சரஸ்வதி அம்மாளின் சிலை திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை (04) வெகு விமர்சையாக இடம்பெற்றது. இந்நிகழ்வு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் பாடசாலையின் அதிபர் கோவிந்தன் திருநாவுக்கரசுவின் தலைமையில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கமைய, பாடசாலையின் பழைய மாணவரான சந்திரமோகனின் நிதிப்பங்களிப்பில் குறித்த சிலை நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அத்தோடு பாடசாலைக்கு அனைத்து விதங்களிலும் உதவிகள் செய்யும் 12 சமுர்த்திப் பயனாளிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





இலங்கை கமநலஅபிவிருத்தி திணைக்களத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவு விழா கொக்கட்டிச்சோலை கமநல சேவை நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது .

## சாய்ந்தமருது லீட் த வே முன்பள்ளியின் சிறுவர் தினம்




சாய்ந்தமருதில் 15 வருடங்களாக இயங்கி வரும் லீட் த வே முன்பள்ளி பாலர் பாடசாலையில் இந்த வருடத்துக்கான சிறுவர் தின நிகழ்வுகள் "பிள்ளைகளைப் பாதுகாப்போம் சமமாக மதிப்போம்" எனும் தொனிப்பொருளில் முன்பள்ளி பணிப்பாளர் ஆசிரியர் ஐ.எம். உவைஸ் (கார்மேல் பற்றிமா கல்லூரி) தலைமையில் மிக விமரிசையாக நேற்று கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கான விளையாட்டு போட்டிகள்,சங்கீதக் கதிரை, முயலோட்டம்,நீர் நிரப்புதல், ஓட்டப்பந்தயம், பலூன் உடைத்தல் போன்ற விளையாட்டுக்களும் கலை நிகழ்ச்சிகள்,மாணவர்களின் தனித் திறமைகள் என்பன பாடசாலையின் அதிபர் திருமதி எம்.பாத்திமா பர்ஸானா மற்றும் ஆசிரியை திருமதி எம்.ஜே.எப்.அஜானி ஆகியோர்களின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்று, இறுதியில் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

## காரைதீவின் புதிய பிரதேச செயலாளருக்கு மகத்தான வரவேற்பு

காரைதீவு பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரி கணேசமுர்த்தி அருணனுக்கு அவர்களுக்கு நேற்று(4) வெள்ளிக்கிழமை சிவில் அமைப்புகளால் பாரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

முன்னதாக காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றது. பின்னர் அங்கிருந்து மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அவர் அழைத்து வரப்பட்டார்.

பின்பு பிரதேச செயலாளர் பணிமனையில் மக்களின் வரவேற்பு கூட்டமும் இடம்பெற்றது.

அங்கு அறங்காவலர் சபை செயலாளர் சி. நந்தேஸ்வரன் தலைவர் இ.குணசிங்கம் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வித்தகர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவடி கந்தசாமி ஆலய செயலாளர் சிவகுமார் நன்றி உரையாற்றினார்.கூட்டத்தில் மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி ஆலய தலைவர்கள், பரிபாலன சபையினர், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## பொருளாதார ரீதியில் பின்தங்கிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

காரைதீவு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி கிழக்கு மற்றும் மேற்கு கிராம சேவகர் பிரிவுகளில் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் சுய தொழில் புரிகின்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மாவடிப்பள்ளி மொழி அபிவிருத்தி மற்றும் சக வாழ்வு சங்கத்தினர் அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க 16 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவியாக காசோலை வழங்கப்பட்டது. மாவடிப்பள்ளி கிழக்கு கிராம உத்தயோகத்தர் காரியலயத்தில் மாவடிப்பள்ளி மொழி அபிவிருத்தி மற்றும் சகவாழ்வு சங்கத்தின் தலைவர் இஸற். எம். நஸ்கான் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் தலைவி டி.வாணி, விஷேட அதிதியாக எச்.டி.ஓ.நிறுவனத்தின் இணைப்பாளர் எம்.ஐ.ரியால்,கிராம உத்தியோகத்தர் ஏ.ஓ .எம். அலியார்,மாவடிப்பள்ளி கிழக்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எச்.ஹினாயா மற்றும் பயனாளர்கள் கலந்து கொண்டனர்.

## பாடசாலை மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

'பாதுகாப்பான மற்றும் சுகாதாரத்துடன் கூடிய சுற்றுச்சூழலை கட்டியெழுப்புதல், கழிவு நீர் முகாமைத்துவத்துக்கு பங்களிப்பு செய்தல் போன்ற எண்ணக்கருவில் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.



நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் காரியாலயத்தின் ஏற்பாட்டில், அதன் முகாமையாளர் ஐ.எல்.ஹைதர் அலியின் வழிகாட்டலில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வு செயலமர்வில், சுத்தமான குடிநீரின் முக்கியத்துவம், நீரை எவ்வாறு வீண்விரயம் இல்லாமல் பாவிப்பது, நீர்ப்பாவனையாளர்களின் வகிபாகம், சுத்தமான குடிநீர் எமது சுகாதார வாழ்க்கைக்கு எவ்வாறான உதவிகளை செய்கின்றது மற்றும் கழிவு நீரை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக பாடசாலை சுற்றுச்சூழல் மற்றும் எமது குடியிருப்பு பகுதிகளை எவ்வாறு பாதுகாப்பது போன்ற பல்வேறு விடயங்கள் காணொளி மூலம் தெளிவூட்டப்பட்டன.

## ஈட்டி எறிதல் போட்டியில் இரண்டாமிடம்

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)



திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் அக்கரைப்பற்று பனங்காடு பாசுபதேசுவரர் வித்தியாலய மாணவி எஸ்.கிசார்த்தனா ஈட்டி எறிதல் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கி தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளார்.

இம்மாணவியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் த.இந்திரன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வின்போது மாணவி கிசார்த்தனா மற்றும் மாணவியின் பெற்றோர், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் இ.ஹேமலக்சன், உடற்கல்வி ஆசிரியர்கள் மு.சிவசாந்தன், லட்சுமி திருச்செல்வம் ஆகியோர் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன், நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் இரத்து

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கான 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்களில் பல முறைகேடுகள் இருப்பதாகக் கூறி பாதிக்கப்பட்ட 14 ஆசிரியர்கள், இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் ஆசிரியர் சங்கத் தலைவர் ப்ரியந்த பெர்னாண்டோ ஆகியோரால் கல்முனை மாகாண மேல் நீதிமன்றத்தில் கட்டாணை (writ) மனு கடந்த மே மாதம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஆசிரியர் இடமாற்ற சபை மற்றும் ஆசிரியர் இடமாற்ற மேன்முறையீட்டு சபை ஆகியன சரியாகக் கட்டமைக்கப்படவில்லை. கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக்கொள்கைக்கு முரணாக ஆசிரியர் இடமாற்றங்கள் இடம்பெற்றிருப்பதாக இதில் கூறி தங்களது இடமாற்றங்களை ரத்து செய்யக் கோரியும் மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.



இவ்வழக்கு அண்மையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பிரதிவாதிகள் சார்பில் ஆஜராகிய கிழக்கு மாகாண சபை சட்டத்தரணிகள் பாதிக்கப்பட்ட அனைத்து மனுதாரர்களினதும் இடமாற்றங்களை இரத்து செய்வதாகவும் அவர்கள் இடமாற்றத்துக்கு முன்னர் எந்தப் பாடசாலைகளில் கற்பித்தார்களோ அந்தப் பாடசாலைகளில் அவர்களை மீள அமர்த்துவதற்கும் எதிர்வரும் காலங்களில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை கண்டிப்பாக பின்பற்றி இடமாற்றங்கள் செய்வதாகவும் உறுதியளித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து இவ்வழக்கைத் தாக்கல் செய்த பாதிக்கப்பட்ட 14 ஆசிரியர்களினதும் இடமாற்றம் இரத்து செய்யப்பட்டது.

இந்த வழக்கிற்கு சட்டத்தரணிகளான றாஸி முஹம்மட் ஜாபிர் மற்றும் எப். எச். ஏ. அம்ஜாட் ஆகியோர் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பில் ஆஜராகி காத்திரமான வாதங்களை முன்வைத்திருந்தனர்.

# சம்மாந்துறையில் பெண்களுக்கான அரபுக் கல்லூரி

இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமங்களில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை ஒரு பெரிய கிராமமாகும். செந்நெல் வயல்களும் அதற்கு நீர்பாய்ச்சும் சிற்றாறுகளும் இக் கிராமத்தின் செழிப்புக்கு ஒரு சான்று. கல்வி நிலையங்கள் நிரம்பி வழிவதுபோல் மார்க்கக் கல்விக்குப் பணிசெய்யும் மத்ரசாக்களும், அரபுக் கல்லூரிகளும் இக் கிராமத்தின் உயிரோட்டத்திற்கு உந்து சக்தியாக இருந்து வருகின்றன. காலத்தின் தேவை கருதி பெண்களுக்கான தனியான மார்க்கக் கல்வி நிலையங்களும் உயிர்பெறத் தொடங்கின.

1995 காலப்பகுதியில் முஸ்லிம் சிறார்களின் மார்க்கக் கல்வியில் பல குறைபாடுகள் இனங் காணப்பட்டன. இவர்களின் மார்க்கக் கல்வி அதிகாலையிலும், மாலை வேளைகளிலும் ஓதற்பள்ளி என்ற பெயரில் பல இடங்களில், வீடுகளில் நடைபெற்று வந்தன. பெரும்பாலான ஓதற்பள்ளிகள் பெண்களாலேயே நடத்தப்பட்டன. அப் பெண்மணிகள் முஅல்லிமாக்களாகவோ, சீராக மார்க்கக் கல்வியை பயின்றவர்களாகவோ இருக்கவில்லை. மாறாக அவர்களுக்குத் தெரிந்தமுறையில் அல் குர்ஆனை இவ் ஓதப்பள்ளிகளில் ஓதிக்கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் லெப்பம்மா என அழைக்கப்பட்டார்கள். இதேபோல ஆண்களும் நடத்தினார்கள். அவர்கள் லெப்பைமார்கள் என அழைக்கப்பட்டார்கள். "வரத்திலில் குர்ஆன தர்தீலா" அல் குர்ஆனை அழகிய முறையில் ஓதுங்கள் என்ற திருவசனத்திற்கு ஏற்ப எமது ஊரில் குர்ஆன் மத்ரஸாக்கள் அமையவில்லையே என்ற கவலையும் சிந்தனையும் எமது கிராமத்தின் புத்திஜீவிகளின் உள்ளத்தில் உதித்தன.

ஓதற்பள்ளிகள் முறையாக நெறிப்படுத்தப்பட்டு சீரான முறையிலே கல்வி வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் 1995ஆம் ஆண்டு ஹஜ்ஜுப்பெருநாள் அன்று ஹிஜ்றா ஜும்ஆப் பள்ளியில் அன்றைய மஜ்லிஸ் அஸ்ஸுறாவின் அமீர் சங்கைக்குரிய மர்ஹூம் அல்ஹாஜ் ஆ. டீ. அலியார் ஹஸரத்தின் தலைமையில் ஒரு மஷூறா நடைபெற்றது. அந்த மஷூறாவில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அத்தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக அஸ்ஸாலிஹாத் அரபுக் கல்லூரியின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் பொறியியலாளர் யாசீன் பாவா அப்துல் மஜீட் (பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களின் தலைமையில் 25 பேர்கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இக்குழு பல கூட்டங்கள் கூடி எடுத்த முடிவின் பிரகாரம் 'ஜம்மியதுல் குர்ஆனுல் ஹகீம்' என்ற பெயரில் ஒரு அமைப்பு ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் பொறியியலாளர் யாசீன்பாவா அப்துல் மஜீட் (பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசன திணைக்களம்) வீட்டில் உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பின் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் எல்லா ஓதற்பள்ளிகளினதும் லெப்பை, லெப்பம்மாக்களுக்கும் உலமாக்களினால் பயிற்சியளிக்கப்பட்டு ஒருமுகமான முறையில் கற்பிக்கவேண்டும் என்றும் இதற்கமைவாக சம்மாந்துறையில் இயங்கி வந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட ஓதற்பள்ளிகளையும் இனங்கண்டு அவைகளைப் பதிவு செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அமைப்புக்குரிய மஷூறாக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அவ்வேளைகளில் ஒரு நாள் சம்மாந்துறையில் அக்கறை கொண்ட ஒரு குழுவினர் பள்ளிவாசல் நிர்வாகங்களில் எமது ஊரின் படித்த தீனுக்காகப் பணிசெய்யும் பலரை இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அஸ்ஸாலிஹாத்தின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் பொறியியலாளர் யாசீன்பாவா அப்துல் மஜீடை (பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசன திணைக்களம்) பள்ளிவாசல் நிர்வாகங்களில் மீண்டும் சேர்த்துக் கொள்ள மஷூறா செய்ய வீட்டுக்கு வந்திருந்தனர். அவ்வேளை பொறியியலாளரின் மனைவி அசனார் ஜெனூபா அப்துல் மஜீட், அவரின் வீட்டின் திரை மறைவில் நின்று கொண்டு 'எனது கணவர் பள்ளி நிர்வாகத்தில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படுவதில் எனக்கு விருப்பமில்லை. பள்ளி நிர்வாகப் பணி செய்ய ஊரில் பலர் இருக்கிறார்கள். எமது ஊரில் பெண்களுக்கான ஒரு அரபுக் கல்லூரியை அமைக்க முன்வாருங்கள். அதற்காகப் பணிசெய்ய நானும் எனது கணவரும் முழு மனதோடு வருகிறோம். அந்த மத்ரஸாவின் உருவாக்கத்திற்கு எங்கள் சொத்துக்களையும் என் பிள்ளைகளையும் தரத் தயாராக இருக்கிறோம்' என்று ஆணித்தரமாகக் கூறி அந்தக் குழுவினரை விருந்து உபசாரம் அளித்து அனுப்பி வைத்தார். அன்றிலிருந்து சம்மாந்துறையில் ஒரு பெண்களுக்கான மத்ரஸா உருவாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை கருக்கட்டத் தொடங்கியது.

'ஜம்மியதுல் குர்ஆனுல் ஹகீம்' அமைப்பிற்குரிய மஷூறாக்கள் அடிக்கடி அன்றைய மத்ரஸாப் பள்ளி, புதுப்பள்ளி என்று அழைக்கப்பட்ட இன்றைய மஸ்ஜிதுல்உம்மா பள்ளிவாசலில் நடைபெற்றுக்கொண்டு வந்தது. மஷூறாவேளையில் ஒரு நாள் கே.எல். இஸ்மாயில் (சபீனா கோல்ட் ஹவுஸ்), மௌலவி எஸ்.எல்.உதுமான் ஆகிய இருவரும் வந்து தங்கள் பிள்ளைகளை கல் எலியா மத்ரஸாவில் சேர்க்கச் சென்றபோது "இங்கு வளங்கள் போதாமல் இருக்கிறது, உங்கள் ஊர்தான் எல்லா வளங்களும் உள்ள இடம்," என்று கூறி பிள்ளையைச் சேர்க்காமல் திருப்பி அனுப்பி விட்டார்கள்." என்று சொன்னது மட்டுமல்லாமல் கட்டாயம் எமது சம்மாந்துறையில் பெண்களுக்கான ஒரு அரபுக் கல்லூரியை ஆரம்பியுங்கள் என்ற கருத்தையும் வலியுறுத்தினார்.

இந்தச் செய்தி அனைவர் மனதிலும் பசுமரத்தாணிபோல பதியத்தொடங்கியது. இதற்கான வளங்கள் எதுவுமே இல்லாதபோதும், பெண்கள் மத்ரஸா ஒன்று, இரண்டு மாதங்களுக்கு இடையில் (12.06.1995)ல் உருவாக்கப்பட வேண்டும் என்று ஸ்தாபகத் தலைவர் பொறியியலாளர் யாசீன் பாவா அப்துல் மஜீட் (பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம்) தலைமையில் முடிவெடுக்கப்பட்டது. இந்த நல்ல பணியை தனது வீட்டில் இருந்து முதலில் ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தை வைத்தே இக்கால வரையறையை பொறியியலாளர் முடிவுசெய்தார். இம்முடிவின் பிரகாரம் அங்குரார்ப்பண வைபவம் ஸ்தாபகத் தலைவர் வீட்டில் 1995.06.12 அன்று நடைபெற்றது. அன்று கிழக்கு மாகாணத்தின் அரபு மத்ரஸாக்களின் அதிபர்கள், உஸ்தாதுமார்கள், ஊர்ப் பெரியார்கள், மஜ்லிஸ் அஷ்ஷூறா மற்றும் நம்பிக்கையாளர் சபையினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். முஹிடீன் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

**மஷூறாவேளையில் ஒரு நாள் கே.எல். இஸ்மாயில் (சபீனா கோல்ட் ஹவுஸ்), மௌலவி எஸ்.எல். உதுமான் ஆகிய இருவரும் வந்து தங்கள் பிள்ளைகளை கல்–எலியா மத்ரஸாவில் சேர்க்கச் சென்றபோது "இங்கு வளங்கள் போதாமல் இருக்கிறது, உங்கள் ஊர்தான் எல்லா வளங்களும் உள்ள இடம்," என்று கூறி பிள்ளையைச் சேர்க்காமல் திருப்பி அனுப்பி விட்டார்கள்." என்று சொன்னது மட்டுமல்லாமல் கட்டாயம் எமது சம்மாந்துறையில் பெண்களுக்கான ஒரு அரபுக் கல்லூரியை ஆரம்பியுங்கள் என்ற கருத்தையும் வலியுறுத்தினார்.**

இதற்கான மாணவிகள் தெரிவில் சம்மாந்துறை மாணவிகளுக்கே முன்னுரிமை என்றும், மஹல்லாவிற்கு ஒருவர் வீதம் அன்றைய ஊரின் 33 மஹல்லாக்களில் இருந்தும் 33 மாணவிகளைக் கொண்டு அது ஆரம்பிக்கப்பட்டது. அதிபராக மௌலவி கே. எல். ஆதம் பாவா (மதனி) வும் முஅல்லிமாவாக கல் எலியாவில் பயின்று வெளியான எம்.எல். சிபாயாவும் மத்ரஸாவிற்குப் பொறுப்பானார்கள். மாணவிகள் பாடசாலைக் கல்வியைத் தொடர்பவர்களாயின் அதற்கு இடையூறு வராதவாறு பாடசாலை முடிந்த பின்னர் மாலை 6.00 மணி வரையும் இவ் வருடம் முடியும் மட்டும் வகுப்புக்கள் நடைபெறும் என்ற ஒழுங்கிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. வருட முடிவில் முழுநேரமும் மார்க்கக் கல்வி கற்கும் மத்ரஸாவாக இயங்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

1996ஆம் ஆண்டில் மத்ரஸா முழு நேரக் கல்வி கற்பிப்பதற்கான ஒழுங்கின்படி ஊர் மாணவிகள் இரவில் தங்குவதற்காகச் சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும், மாவட்டத்தில் ஊருக்கு ஒருவராகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு மாணவியர்களும் தங்கிக் கற்பதாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அன்று தங்கிக் கற்பவர்களாக நிந்தவூரிலிருந்து இரண்டு மாணவியரும், மாவடிப்பள்ளியில் இருந்து இரண்டு மாணவியரும், இறக்காமத்திலிருந்து இரண்டு மாணவிரும் ஸ்தாபகத் தலைவர் பொறியியலாளர் யாசீன் பாவா அப்துல் மஜீட் (பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம்) வீட்டில் தங்கிக் கற்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. முழு நேர மத்ரஸாவாக இது செயற்பட்டமையால் பாடசாலை ஆசிரியராக இருந்து மத்ரஸாவின் அதிபராக கடமை செய்வதில் மௌலவி கே. எல். ஆதம்பாவாவுக்கு சிரமம் ஏற்பட்டதன் காரணமாக அவர் அதிபர் பதவியைத் துறந்து பகுதி நேர போதனா ஆசிரியராகவும், மௌலவியா எம்.எல். சிபாயா போதனாசிரியையாகவும், மர்ஹூம் மௌலவி அல் ஹாபிழ் ஏ. எல். அப்துல் றஷீத் (தப்லீகி) அதிபராகவும் பணியாற்றினர். அதிபர் ஜம்மியதுல் குர்ஆனுல் ஹகீம் ஆகிய தாய் இயக்கத்தின் செயலாளராகவும் சம்மாந்துறை குர்ஆன் மத்ரஸாக்களின் கல்விப் பரிசோதகராகவும் பணியாற்றினார். இப்பணிகளுக்காக சிறுகொடுப்பனவொன்றை சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை வழங்கியது.

மத்ரஸாவின் தேவைகள் அதிகரிப்பு, மாணவிகள் அதிகரிப்பு, நிர்வாக கட்டமைப்புக்கான கட்டட வசதிகள் தற்போதைய மத்ரஸாவின் போதாமை காரணமாக ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் பொறியியலாளர் யாசீன்பாவா அப்துல் மஜீட் (பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களது வீட்டிலிருந்து வேறு ஒரு இடத்திற்கு மத்ரஸாவை மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக இம் மத்ரஸாவின் தேவை சம்மாந்துறைக்கு மட்டுமல்லாமல் அகில இலங்கையிலும் வியாபித்து உலகம் முழுவதிலும் தஃவாப்பணி செய்யக்கூடிய ஒரு பல்கலைக் கழகமாக எதிர்காலத்தில் திகழ வேண்டும் என்ற பரந்த நோக்கம் கொண்டதாக இருந்ததால் மத்ரஸாவிற்கு பாரிய இடமொன்றைத் தேடவேண்டும் என்பது சம்பந்தமான கவலை ஸ்தாபகத் தலைவர் உட்பட நிருவாகிகளை ஆட்கொண்டிருந்தது. இதே கவலையில் சதாவுமிருந்த அவர்களின் சிந்தனையில் ஊரின் பல இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன. முதன் முதலாக சம்மாந்துறை முஹிடீன் மஸ்ஜித் (சின்னப்பள்ளி) அருகாமையில் இயங்கிக்கொண்டிருக்கும் ஹிப்ழு மத்ரஸா தாறுல் ஹசனாத்தை அணுகினர். அது டாக்டர் முஹம்மதுத் தம்பி மீராலெப்பை ஹிப்ழு மத்ரஸாவுக்கென்றே ஒதுக்கப்பட்டு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததால் அவ்விடம் சாத்தியப்படவில்லை.

அடுத்த இடமாக இன்று மையவாடியாக அமைந்துள்ள முஅல்லா மஹல்லாவின் (மையவாடிப் பள்ளி) இடத்தை சிந்தித்தனர். அவ்விடம் ஊரின் எல்லையோரமாக இருப்பதோடு மையவாடிகள் இருக்குமிடத்தில் பெண்பிள்ளைகள் தங்கிப் படிக்க வைப்பது வீண் விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பதால் அந்த எண்ணத்தையும் கைவிட்டனர். மூன்றாவதாக சம்மாந்துறை அல்ஹம்றா வித்தியாலயம் அமைந்திருக்கும் இடத்தை அணுகினர். பலரின் ஆலோசனைகள் பெண்கள் மத்ரஸாவிற்குச் சாதமாக அமையாததன் காரணமாக அந்த இடங்கள் யாவும் கை நழுவிப்போயின..

ஸ்தாபகத் தலைவர் பொறியியலாளர் யாசீன்பாவா அப்துல் மஜீட் (பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசன திணைக்களம்) பதவியுயர்வு பெற்றதனால் தனது வேலைப்பழுவின் காரணமாக தன் குழந்தை போல் பராமரித்து வந்த அஸ்ஸாலிஹாத் அரபுக்கல்லூரியை 24 மணிநேரமும் கண்காணித்து பணிகளைச் செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மத்ரஸாவின் நிர்வாக உறுப்பினர்கள் பலரின் வேண்டுகோளுக்கு அமைய 23.01.2009 அன்று தற்போதைய தலைவர் யாசீன்பாவா அப்துல் அஸீஸும் பொறியியலாளர் எம்.பி.நழீம் ஆகியோரும் நிர்வாகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டனர் 05.04.2009ஆம் ஆண்டு மத்ரஸாவின் முதற் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சூறா சபையின் மசூறாவிற்கமைய 02.10.2009இல் நடைபெற்ற கூட்டத்தில் நடைமுறையில் இருந்த நிர்வாகம் கலைந்துபோக மஜ்லிஸ் அஷ்ஷூறா சபை இடைக் கால நிருவாகம் ஒன்றை அமைக்க ஆலோசனை கூறியது. அதற்கமைய 18.10.2009இல் நடைபெற்ற கூட்டத்தில் இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்பட்டது. நிர்வாக சபையின் தலைவராக சேகு தப்லீக் எம்.பி.அலியார் ஹசரத்தும் உபதலைவராக டாக்டர் யாசீன்பாவா அப்துல் அஸீஸும் பொருளாளராக எம்.பி.நழீம் பொறியியலாளரும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து அல்லாஹவின் உதவியினால் பல கூட்டங்கள் நடைபெற்று மத்ரஸாவின் எதிர்கால அபிவிருத்தி பற்றி ஆலோசிக்கப்பட்டது. மத்ரஸாவிற்குப் பணஉதவி வழங்கியவர்களையும், வயற்காணிகளை நன்கொடையாக வழங்கியவர்களையும் மத்ரசா நிர்வாகத்தில் உள்வாங்கி ஒரு பொதுச்சபை உருவாக்கப்பட்டு 09.04.2011இல் நடைபெற்ற கூட்டத்தில் புதிய நிருவாக சபை தெரிவு செய்யப்பட்டது. அதன் தலைவராக தற்போதைய தலைவர் டொக்டர் யாசீன்பாவா அப்துல் அஸீஸும் செயலாளராக ரீ.எம்.சாஜித் (தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்) பொருளாளராக எம்.ஐ.அபூசாலி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பொருளாளராகக் கடமையாற்றிய அபூசாலி சுகயீனம் அடைந்ததன் காரணமாக அப்பதவிக்கு கே.எல்.அல் அமீன் (ஓய்வுநிலை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்) நியமிக்கப்பட்டார். மேலும் ஐந்துபேர் கொண்ட சூறா சபையும் உருவாக்கப்பட்டது. அதன் உறுப்பினர்களாக ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் பொறியியலாளர் யாசீன் பாவா அப்துல் மஜீட் (பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசன திணைக்களம்), சேகு தப்லீக் மர்ஹூம் எம்.பீ.அலியார் ஹசரத் , மௌலவி ஏ.அப்துல் றசீட், மௌலவி யூ.எல்.முபாறக், எம்.எல்.அப்துல் வாஹித் ஆசிரியரும் தெரிவு செய்யப்பட்டு இந்த சூறா சபையின் நெறிப்படுத்தலின் கீழ் இந்த நிர்வாக சபை மிகவும் சிறப்பாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்த நிருவாகத்தின் கீழ் மத்ரஸா மாணவிகளுக்கான தனியான உள்ளக பள்ளிவாசல் ஒன்றும் புதிய வகுப்பறை மண்டபமும் சகல வசதிகளும் கொண்டதாக தங்குமிடவிடுதி, புதிய சமையலறைத் தொகுதி, புதிய மாடிக்கட்டடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறப்பாய் இயங்கிவரும் இந்த மத்ரஸா 259 மௌலவியாக்களையும், 65 ஹாபிழாக்களையும் 83 முபல்லிகாக்களையும் உருவாக்கியுள்ளது. இம்முறை (2024.10.06) ஆம் திகதி 75 மௌலவியாக்கள் 34 ஹாபிழாக்கள், 21 முபல்லியாக்கள் பட்டம் பெற்று வெளியேறவுள்ளனர். இவர்களின் தீன் தௌவாப்பணி இந்த இலங்கைத் திருநாட்டின் நாலா புறங்களிலும் வியாபித்து இஹ்லாசுடன் இறுதி மூச்சுவரை பணிசெய்ய அல்லாஹ் அருள் புரிவான ஆமீன்.

இந்த அஸ்ஸாலிஹாத் அரபுக் கல்லூரியின் வளர்ச்சியில் பணி செய்த ஸ்தாபகத் தலைவர் உட்பட உறுப்பினர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் முன்னாள் அதிபர்கள், பணியாளர்கள் உட்பட இன்றுவரை பணிசெய்து கொண்டிருக்கும் தலைவர் உட்பட நிர்வாக உறுப்பினர்கள், அதிபர் உட்பட உஸ்தாதுமார்கள், முஅல்லிமாக்கள், பணியாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரது நல்லமல்களை அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக, மறுமையில் ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனபதியை வழங்குவானாக கல்விக்காய் பணி செய்வோர் காலத்தால் அழிவதில்லை.

கலாபூஷணம்
யூனூஸ் கே. றகுமான்





# உலகில் முன்னணி நாடாக சவுதியை கட்டியெழுப்பியவர் மன்னர் சல்மான்



**இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்று பத்தாவது ஆண்டு நிறைவடைவதை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது**

உலகின் முஸ்லிம் சமூகத்திற்காகவும் தன் நாட்டுக்காகவும் தன்னையே அர்ப்பணித்து அளப்பரிய சேவைகள் ஆற்றிவரும் சிறந்த மனிதரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ், கடந்த பத்தாண்டுகளில் சவுதியின் அபிவிருத்திக்கும் உலக முஸ்லிம்களின் மேம்பாட்டுக்கும் மாத்திரமல்லாமல் முழு மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் ஆற்றியுள்ள சேவைகளும் பணிகளும் வரலாற்றில் அழியாத்தடம் பதித்துள்ளன.

குறிப்பாக சவுதி அரேபியாவின் செழிப்புக்கும் ஸ்திரத்தன்மைக்கும் அவர் தன்னாலான அனைத்து பணிகளையும் மேற்கொண்டுள்ளார். அந்த முயற்சிகளில் அவர் வெற்றியும் கண்டுள்ளார். அதன் பயனாக சவுதி மக்கள் மத்தியில் மாத்திரமல்லாமல் உலக முஸ்லிம்கள் மத்தியிலும் தனியிடம் பிடித்த ஒப்பற்ற தலைவராக விளங்குகிறார் மன்னர் சல்மான்.

இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலராக விளங்கும் இவர், மனிதாபிமானம் நிறைந்த தலைவராகவும், நீதியுள்ள இமாமாகவும் முஸ்லிம்களின் ஆட்சியாளர் எனக் கருதப்படும் அளவுக்கு அவர் சிறந்தவராகக் கருதப்படுகிறார். அவர் மன்னராகப் பதவியேற்று நாளை 06 ஆம் திகதியுடன் பத்து வருடங்கள் நிறைவடைகின்றன.

இந்தக் காலப்பகுதியில் தன்னுடைய நாட்டு மக்கள் என்றும் வேறு நாட்டுப் பிரஜைகள் என்றும் பிரித்துப்பார்க்காமல் அனைத்து மக்களையும் ஒரே விதமாக மனிதாபிமான கண் கொண்டு நோக்குகிறார் அவர். அதற்கேற்பவே அவரது சேவைகள், பணிகள் அமைந்துள்ளன.

மன்னராக சல்மான் பதவியேற்றதும் அவரது மகனான முஹம்மத் பின் சல்மான் பட்டத்து இளவரசராக நியமனம் பெற்றார். அவர் சவுதியின் துரித முன்னேற்றத்தில் விஷேட கவனம் செலுத்தும் துடிப்பு மிக்க இளம் தலைவராவார். இந்தப் பின்புலத்தில் சவுதியை சகல துறைகளிலும் மன்னர் சல்மானினால் துரிதமாக அபிவிருத்தி செய்ய முடிந்துள்ளது.

இதன் பயனாக சவுதியானது மத்திய கிழக்கின் தலைநகராகவும் உலக சமாதானத்தின் கேந்திர மையமாகவும் மாத்திரமல்லாமல் உலக முஸ்லிம்களின் நம்பிக்கைக்குரிய தேசமாகவும் திகழுகிறது. உலகமே சவுதியை வியப்புடன் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு அதன் முன்னேற்றங்கள் அமைந்துள்ளன.

மன்னரதும் இளவரசரதும் கடும் முயற்சிகளின் ஊடாக பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்ட நாடாக விளங்குகிறது சவுதி. தங்கள் நாட்டுப் பிரஜைகள் யாராவது உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி பயங்கரவாதத்திற்குத் துணை புரிந்தார்கள் என்பது நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மிகக் கடும் தண்டனைகள் அளிக்கப்படுகின்றன. குறிப்பாக மரண தண்டனையை வழங்கவும் சவுதி பின்நிற்பதில்லை.

இப்பின்னணியில் மன்னர் சல்மான், இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் தலைமைத்துவ வழிகாட்டல்களின் கீழ் சவுதியின் இஸ்லாமிய விவகார அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் ஆல் ஷைக்கின் ஏற்பாட்டில் பயங்கரவாத ஒழிப்பு மாநாடுகளும் செயலமர்வுகளும் விழிப்புணர்வு கருத்தரங்குகளும் சவுதியிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் அடிக்கடி நடாத்தப்பட்டு வருகின்றன. இதன் நிமித்தம் வருடாவருடம் கோடிக்கணக்கான ரியால்களை சவுதி செலவிட்டு வருகின்றது. குறிப்பாக



கடந்த இரண்டு மாதங்களுக்குள் 15 பயங்கரவாத ஒழிப்பு மாநாடுகளை உலகின் பல நாடுகளிலும் நடாத்தியுள்ளது சவுதி. உலகம் அமைதி, சமாதானம் தலைத்தோங்கும் பூமியாகத் திகழ வேண்டும் என்பதே மன்னரினதும் இளவரசரினதும் ஒரே இலக்காகும்.

அதேநேரம் ஊழல் மோசடிகளை ஒழிப்பதிலும் சவுதி விஷேட கவனம் செலுத்தி செயற்படுகிறது. தம்முடைய நாட்டில் ஊழல் மோசடியில் எவர் ஈடுபட்டாலும், குறிப்பாக அவர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அல்லது உயர் பதவிகள் வகிப்பவராக இருந்தாலும் அவர்கள் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவர். அத்தோடு ஊழல், மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டால் அவரது சொத்துக்களும் அரசுடமையாக்கப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக உயரிய தண்டனைகளும் அத்தகையவர்களுக்கு வழங்கப்படுகின்றன. கடந்த மாதம் கூட சவுதி பொலிஸ் மாஅதிபரின் பாரிய ஊழல் மோசடி கண்டுபிடிக்கப்பட்டு அவரது சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டதோடு அவருக்கு பல வருடங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் போதைப்பொருட்களை முற்றாகத் தடை செய்த நாடு சவுதி. அதற்கென அங்கு கடுமையான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அச்சட்டங்களை மீறுவோருக்கு கடும் தண்டனைகளும் வழங்கப்படுகின்றன. போதைப்பொருள் எவ்வடிவத்தில் இருந்தாலும் அதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றும் நாடாக திகழுகிறது சவுதி. ஏனெனில் போதைப்பொருட்களின் பேரழிவில் இருந்து மனித சமூகத்தைப் பாதுகாப்பதே சவுதியின் இலக்காகும்.

அதனால் உலகில் யாராவது தங்கள் நாட்டில் பயங்கரவாதத்தையும் ஊழலையும் போதைப்பொருள் குற்றங்களையும் ஒழித்து நாட்டை முன்னேற்றப் பாதையிலும் பிரஜைகளை நற்பண்புகள் நிறைந்தவர்களாகவும் கட்டியெழுப்ப விரும்புவார் என்றால் அதற்கான சிறந்த முன்மாதிரிகளாக சவுதி மன்னரையும் இளவரசரையும் கொள்ள முடியும்.

பலஸ்தீன மக்கள் முகம் கொடுத்துவரும் துன்ப துயரங்களை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் சவுதி விஷேட கவனம் எடுத்துக் கொண்டுள்ளது. இதன் நிமித்தம் சர்வதேச மட்டத்தில் இராஜதந்திர முயற்சிகளை கடும் அர்ப்பணிப்புகளுடன் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால் உலக வல்லரசுகள் கூட இவ்விடயத்தில் சவுதி அரேபியாவின் தயவை நாடி நிற்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சவுதியை இவ்வாறான நிலைக்கு கட்டியெப்புவதில் மன்னரதும், இளவரசரதும் வழிகாட்டல்களில் பிராந்திய மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் வெளிநாட்டமைச்சர் இளவரசர் பைஸல் பின் பர்ஹான் ஆல் ஸஊத் முன்னெடுத்துவரும் அளப்பரிய பணிகள் மெச்சிப் பாராட்டத்தக்கவையானதாகும்.

அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும், அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ளும் சவுதி, பிராந்தியத்திலும் முழு உலகிலும் தவிர்க்க முடியாத தனித்துவம் மிக்க இடத்தைப் பிடித்துள்ளது.

இவை இவ்வாறிருக்க, இன்றைய நவீன உலகுக்கு ஏற்ற வகையில் சவுதியைக் கட்டியெழுப்புவதில் அதிக கவனம் செலுத்தியுள்ள சவுதியின் விஷன் 2030 என்ற திட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இளவரசரின் இந்த தொலைநோக்கு திட்டம், மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸினதும் சவுதி மக்களினதும் முழுமையான ஆதரவுப் பெற்றதாக உள்ளது. சவுதியைக் கட்டியெழுப்பும் நோக்கிலான அனைத்து திட்டங்களும் இந்த தொலைநோக்கு திட்டத்தின் படி முன்னெடுக்கப்படுகின்றன. மன்னரின் நேரடி கண்காணிப்பில் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத் திட்டங்களின் ஊடாக சாதனைகள் பலவும் அடையப்பட்டுள்ளன.

குறிப்பாக சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாத் மாநகருக்கு மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் 62 வருடங்கள் கவர்னராக பணிபுரிந்துள்ளார். அக்காலப் பகுதியில் ரியாத்தை கட்டியெழுப்பவென அவர் அர்ப்பணிப்புடன் உழைத்துள்ளார். அதன் ஊடாக ரியாத் பாரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அதன் பயனாக ரியாத் மாநகரம் இன்று உலகிலேயே மிக முன்னேற்றமடைந்த மாநகராக விளங்குகிறது.

அதே போன்று அவர் இளவரசராகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் எனப் பல பதவிகள் வகித்து நாட்டுக்கு அளப்பரிய பல சேவைகளை ஆற்றியுள்ளார். மேலும் சவுதி ஆட்சியாளர்களான பல மன்னர்களின் நம்பிக்கைக்குரிய செயலாளராகவும், அவர்களது சிறப்புரிய பிரத்தியேக ஆலோசகராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். ரியாத் மாநகரைக் கட்டியெழுப்புவதிலும் இத்தகைய பதவிகள் ஊடாகவும் பெற்றுக்கொண்ட பரந்த அனுபவமும் அறிவும் முழு நாட்டையும் துரித அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல அவருக்கு பின்புலமாக அமைந்துள்ளது. அத்தோடு தமது சிறு வயதிலேயே (10 வயதுக்குள்) முழுக் குர்ஆனையும் மனனம் செய்து கொண்ட பெருமையும் மன்னர் சல்மானுக்கு இருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் உலக முஸ்லிம்கள் தங்கள் புனிதக் கடமையான ஹஜ், உம்ரா கிரியைகளை நிறைவேற்றவென சவுதி அரேபியாவுக்கு செல்ல வேண்டும். அதுவே இறைவனின் ஏற்பாடாகும். அத்தோடு இஸ்லாமியச் சின்னங்களையும் புராதனச் சின்னங்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது சவுதி அரேபியா. அதனால் புனிதக்



கடமைகளை நிறைவேற்ற வரும் உலக முஸ்லிம்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் சவுதி செய்து கொடுக்கின்றது. குறிப்பாக புனித மக்கா, மதீனா வரும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் மன்னரின் நேரடி கண்காணிப்பிலும் பாரிய நிதி ஒதுக்கீட்டிலும் அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

குறிப்பாக இரு ஹரம் ஷரீப்களிலும், விமான நிலையங்களிலும், தரிசிக்கின்ற புனித இடங்களிலும் உள்விவகார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சு, ஹஜ் உம்ரா அமைச்சு மற்றும் விஷேட பாதுகாப்புப் படையினர், விஷேட உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் என அனைவரும் அளவிலா சேவைகளைச் செய்து வருகின்றனர். அதனால் சவுதி மன்னர்களும் அந்நாட்டு மக்களும் அன்று தொட்டு இன்று வரை "ஹஜ், உம்ரா செய்ய வரும் அல்லாஹ்வின் விருந்தாளிகளுக்கு சேவை செய்வது எமக்குப் பெருமைக்குரிய விடயம்" எனக் கூறக்கூடியவர்களாக உள்ளனர்.

இவ்வாறு மன்னர் சல்மானின் நேரடி கண்காணிப்பில் சவுதி முன்னெடுத்து வரும் இந்த இணையற்ற சேவைகளை உலக மக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர். தன் தந்தை மன்னர் சல்மானுடன் இணைந்து இளவரசர் முஹம்மத் பின் சல்மானும் இச்சேவைகளை சிறப்பாக முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்.

இரு புனிதஸ்தலங்களையும் சிறப்பாகப் பராமரித்து வருகின்ற மன்னர் சல்மான், வருடாவருடம் தனது சொந்த செலவில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் இலவசமாக ஹஜ், உம்ராக்களை மேற்கொள்ளவும் வசதி அளிக்கின்றார். குறிப்பாக பலஸ்தீன மக்களுக்கும் உலகில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் இந்த வசதி அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் நிமித்தம் தன்னுடைய பெயரில் "மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மையத்தை" ஆரம்பித்து அளப்பரிய சேவைகளைச் முன்னெடுத்துள்ளார். அதனால் தான் அவருக்கு "மலிகுல் இன்ஸானிய்யா" "மனிதநேய மன்னர்" என்ற பெயரும் "காதிமுல் ஹரமைன் அல் ஷரீபைன்" "இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர், ஊழியர்" எனும் பெயரும் சிறப்புப் பெயர்களாகச் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.




### இலங்கை சவுதி நட்புறவு

இவை இவ்வாறிருக்க, இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் நீண்ட கால நட்புறவு நிலவி வருகிறது. இப்பின்புலத்தில் இலங்கையின் முன்னேற்றத்துக்கும் பாரிய உதவிகளை சவுதி நல்கி வருகிறது. மனிதாபிமான உதவிகள் என்ற அடிப்படையிலும் நீண்ட கால தவணை அடிப்படையிலும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் உதவி ஒத்துழைப்புகளை அளித்துவரும் சிறந்த நாடாகவும் சவுதி திகழ்கிறது.

அண்மையில் கொழும்பு ஷங்கிரில்லா ஹோட்டலில் நடைபெற்ற சவுதி அரேபியாவின் 94வது தேசிய தினக் கொண்டாட்ட நிகழ்வில் சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி ஆற்றிய விஷேட உரையில், சவுதி அரேபியா இலங்கைக்குச் செய்துள்ள அனைத்து உதவி, ஒத்துழைப்புகளையும் தெளிவாக எடுத்துரைத்தார். இத்தகைய பாரிய உதவிகளை சவுதி அரேபியா இலங்கைக்குக் அளித்துள்ளதா என அந்நிகழ்வில் கலந்து கொண்ட பலர் வியந்து நோக்கினர்.

இவ்விழாவில் விஷேட அதிதியாகக் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், சவுதி அரேபியா இலங்கைக்கு ஆற்றியுள்ள பாரிய சேவைகளைப் பெரிதும் பாராட்டியதோடு மென்மேலும் சவுதி அரேபியா இலங்கைக்கு உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். அத்தோடு சவுதி அரேபியாவில் இருந்து இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விசாக் கட்டணம் இனி அறவிடப்பட மாட்டாது என்றும் அவர் தமது உரையின் ஊடாக அறிவித்தார்.

ஆக, சவுதி அரேபியாவையும் அதன் மக்களையும் நவீன யுகத்திற்கு ஏற்ப கட்டியெழுப்புவதிலும் முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதிலும் இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மானும், இளவரசர் முஹம்மத் பின் சல்மானும் அர்ப்பணிப்புக்களுடன் உழைத்து வருகின்றனர். அவ்விருவரும் நவீன சவுதியை செதுக்கும் தனித்துவம் மிக்க தலைவர்களாக விளங்குகிறனர்.

ஆகவே மன்னர் சல்மானினதும் பட்டத்து இளவரசரதும் நாட்டையும் மக்களையும் மேம்படுத்துவதற்கான பணிகளை அங்கீகரித்து இறைவன் அருள் புரியட்டும். அவர்களது பணிகள் மென்மேலும் வெற்றி பெறட்டும்.

அதற்காக இலங்கை மக்கள் சார்பிலும் எமது நிறுவனத்தின் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் பிரார்த்திக்கிறேன்.



**"மன்னர் சல்மான், "மலிகுல் இன்ஸானிய்யா" "மனிதநேய மன்னர்" மற்றும் "காதிமுல் ஹரமைன் அல் ஷரீபைன்" "இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலர், ஊழியர்" என்ற சிறப்புப் பெயர்கள் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்."**


*அஷ்ஷைக் எம்.எச். ஷைஹுத்தின் மதனி*
பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம்.
கொழும்பு






# தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

## தனது வலையமைப்பை கிழக்கு பிராந்தியத்தில் விரிவுபடுத்திய ஒரியன்ட் பைனான்ஸ்



ஒரியன்ட் பைனான்ஸ் செங்கலடி கிளை


ஒரியன்ட் பைனான்ஸ் களுவாஞ்சிக்குடி கிளை

முன்னணி நிதிச் சேவை வழங்குனரான Orient Finance PLC ஆனது செங்கலடி மற்றும் களுவாஞ்சிக்குடியில் இரண்டு புதிய கிளைகளைத் திறந்துள்ளது. இதன்மூலம் தமது சேவைகளை கிழக்கு மாகாணத்தில் வலுப்படுத்தியுள்ளது. இந்த புதிய கிளைகள் உள்ளடங்கலாக ஓரியன்ட் பைனான்ஸின் மொத்த கிளை வலையமைப்பு 37 ஆக அதிகரித்துள்ளது.

## அவுஸ்திரேலிய அரசின் திட்டங்கள் Swinburne Pathway திட்டத்தை பாதிக்காது



உயர் கல்விக்காக அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அவுஸ்திரேலிய அரசாங்கம் தேசிய திட்டமிடல் (National Planning Level NPL) முறையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. 2024 ஒகஸ்ட் 27 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட இந்த மூலோபாய திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை இணைக்கும் வரம்பு முந்தைய 2023 ஆம் ஆண்டில் இணைத்துக் கொண்ட அளவிற்கு கட்டுப்படுத்தி, சர்வதேச மாணவர் பங்கேற்பை கட்டுப்படுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்த முடிவு கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு அதிகரித்து வரும் கேள்வியை சிறப்பாக நிர்வகிக்க தேவையான வசதியை வழங்குகிறது. மேலும், இந்த தேசிய திட்டமிடல் முறை மூலம் உயர்தர திட்டங்களை வழங்குவதற்கும், அதிக மாணவர் ஆதரவு சேவைகளை வழங்குவதற்கும், தெரிவுசெய்யப்பட்ட தொழில்களில் வேலை வாய்ப்புகளுக்கு மாணவர்களை சிறந்த முறையில் தயார்படுத்தவும் பயிற்சி நிறுவனங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். தேசிய திட்டமிடல் நிலை வரம்புகள் 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும். 2025 இல் 270,000 புதிய சர்வதேச மாணவர்கள் தொடங்க உள்ளனர். இதில் பதிவுகள் அல்லது சலுகைகள் உள்ளடங்காது.

எனினும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த கட்டுப்பாடுகள் நவலோக உயர்கல்வி கல்லூரி (NCHS) வழங்கும் Swinburne அறக்கட்டளை அல்லது UniLink டிப்ளோமா திட்டத்தை எந்த வகையிலும் பாதிக்காது என்று நவலோக உயர் கல்வி கல்லூரி தெரிவித்துள்ளது. Nawaloka Holdings இன் துணை நிறுவனமான நவலோக உயர் கல்வி கல்லூரி, பல்கலைக்கழக ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமாகும். இது அவுஸ்திரேலியாவின் Swinburne தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து பிரபலமான Pathway திட்டத்தை இலங்கை மாணவர்களுக்கு வழங்குகிறது. இந்த திட்டத்தின் மூலம், அவுஸ்திரேலியாவின் Swinburne தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் வணிகம், தகவல் தொழில்நுட்பம், சுகாதார அறிவியல் மற்றும் பொறியியல் போன்ற துறைகளில் 60க்கும் மேற்பட்ட பட்டப்படிப்பு பாடத்திட்டங்களுக்கு நேரடியாக நுழையும் வாய்ப்பு இலங்கை மாணவர்களுக்கு கிடைக்கிறது. நவலோக உயர்கல்வி கல்லூரியின் Pathway திட்டத்தில் பதிவு செய்யும் மாணவர்கள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் தேசிய திட்டமிடல் (National Planning Level NPL) திட்டத்தால் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று உறுதியாக கூற முடியும். ஏனெனில், நவலோக உயர்கல்வி கல்லூரியானது அவுஸ்திரேலியாவின் சர்வதேச கல்வியின் இணை பங்குதாரராக செயல்படுகிறது.

## 'Takaful Window/Unit of the Year 2023/24' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட HNB தக்காஃபுல்




HNB பொதுக் காப்புறுதி நிறுவனத்தின் இஸ்லாமிய காப்புறுதிப் பிரிவான HNB பொது தக்காஃபுல், இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித்துறை விருது விழாவில் (SLIBFI) மதிப்புமிக்க 'Takaful Window/Unit of the Year 2023/24' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. UTO EduConsult வழங்கிய இந்த கௌரவமானது, இஸ்லாமிய காப்புறுதித் துறையில் HNB பொதுத் தக்காஃபுலின் தலைமைத்துவத்தையும் இலங்கை முழுவதிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு தக்காஃபுல் கொள்கைகளை ஊக்குவிப்பதிலும் சிறப்பான சேவையை வழங்குவதில் அது கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இது எடுத்துக்காட்டுகிறது. பொதுக் காப்புறுதி துறையில் இந்த கௌரவத்தைப் பெற்ற ஒரே நிறுவனம் HNB பொது தக்காஃபுல் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முன்னோடியான இஸ்லாமிய காப்புறுதி வழங்குனர் எனும் வகையில், HNB பொது தக்காஃபுல் தொடர்ச்சியாக தக்காஃபுல் கொள்கைகளை பேணி வரும் அதே நேரத்தில், அதன் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் புத்தாக்கமான தீர்வுகளை உருவாக்கி அதன் சலுகைகளை விரிவுபடுத்தி வருகிறது. பாரம்பரிய பெறுமதியை பேணியவாறு அதனை நவீன நிதி தீர்வுகளுடன் வழங்கி வரும் இப்பிரிவின் திறனை இந்த விருது சுட்டிக் காட்டுகிறது. இதன் மூலம் பரந்துபட்டு காணப்படும் காப்புறுதிச் சந்தையில் ஷரியாவுக்கு இணங்கக்கூடியதாக போட்டித் தன்மை கொண்ட வசதிகளை அது வழங்குகிறது.

KPMG உடன் இணைந்து நடத்தப்பட்ட SLIBFI விருதுகளுக்கான இறுக்கமான தெரிவுச் செயன்முறையானது, விண்ணப்பதாரர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதித் தரவுகளின் முழுமையான மதிப்பீட்டை உள்ளடக்கியதாகும். இந்த அங்கீகாரமானது, HNB பொது தக்காஃபுலின் நிதி வலிமை, மூலோபாய பாதை மற்றும் நெறிமுறை ரீதியான வணிக நடைமுறைகளுக்கான அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் பிரதிபலிப்பாகும்.

HNB பொதுக் காப்புறுதியின் தக்காஃபுல் பிரிவின் வெற்றியானது அதன் விரிவான வலையமைப்பு மற்றும் ஒப்பிட முடியாத சேவை வழங்கல் ஆகியவற்றின் மூலம் முன்னெடுக்கப்படுகிறது. பல மாகாணங்களில் 35 இற்கும் மேற்பட்ட கிளைகள் மற்றும் 50 இற்கும் மேற்பட்ட சந்தைப்படுத்தல் அதிகாரிகள், 20 முகவர்கள் கொண்ட அர்ப்பணிப்புள்ள குழுவுடன் இங்கி வரும் இப்பிரிவானது, அதன் தயாரிப்புகள் பரந்த மக்களை அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்துள்ளது. தனது வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் பல்வேறு வகையான தயாரிப்புகளை அறிமுகப்படுத்த மிகவும் திறமையான குழுவுடன் இணைந்ததாக, பரந்துபட்ட மக்களை அணுகும் தன்மை HNB பொது தக்காஃபுலுக்கு உறுதுணையாக அமைகிறது.

## அமானா, IBSL இணைந்து வங்கியியல் மாணவர்களுக்கு பிரயோக அனுபவம்



இலங்கை வங்கியியலாளர் நிறுவகத்துடன் அமானா வங்கி ஏற்படுத்தியுள்ள பங்காண்மை தொடர்பில் அறிவித்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, IBSL மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த தொழிற் பயிற்சி வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. இலங்கையின் எதிர்கால வங்கியியல் நிபுணர்களுக்கான நிபுணத்துவ அபிவிருத்தி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும், பிரயோக அனுபவத்தை மேம்படுத்தவும் முன்வந்துள்ளது. இந்த உடன்படிக்கையில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் மற்றும் IBSL பணிப்பாளர் நாயகம் சி.பி.ஏ. கருணாதிலக ஆகியோர் கைச்சாத்திட்டிருந்தனர்.

அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "IBSL உடன் கைகோர்த்து மாணவர்களுக்கு தொழிற்பயிற்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். உயர் திறன் படைத்த வங்கியியல் ஊழியர்களையும், இஸ்லாமிய வங்கியியல் அறிவையும் செயற்பாடுகளையும் இலங்கையில் முன்னேற்றுவதற்கு நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை இந்த நடவடிக்கை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. தொழிற்துறையின் முன்னேற்றத்துக்கு இந்த கைகோர்ப்பு முக்கிய பங்காற்றும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், வங்கியியல் துறையின் உறுதியான மற்றும் அறிவார்ந்த செயற்பாடுகளுக்கு எமது ஆதரவையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது." என்றார்.

IBSL இன் பணிப்பாளர் நாயகம் சி.பி.ஏ. கருணாதிலக இந்தக் கைகோர்ப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் காணப்படும் தனிநபர்களின் நிபுணத்துவ ஆற்றலை மேம்படுத்துவதற்கு அமானா வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள பங்காண்மை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்துள்ளது.

இந்த தொழில்பயிற்சி வாய்ப்புகளின் அறிமுகம் என்பது, உயர் தரம் வாய்ந்த கல்வி மற்றும் பயிற்சியை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பின் எடுத்துக்காட்டாகும்.

பங்குபற்றுநர்களுக்கு நிதிசார் கட்டமைப்பில் மேம்படுவதற்கு இந்த தொழிற்பயிற்சி வாய்ப்புகள் உதவியாக அமையும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். உலகளாவிய ரீதியில் விரிவாக்கமடைந்து வரும் வட்டியில்லாத வங்கியியல் கட்டமைப்பில் வெளிப்பாட்டை கொண்டிருக்க எதிர்பார்ப்போருக்கு அமானா வங்கியின் நிபுணத்துவம் பெறுமதி வாய்ந்த வாய்ப்பாக அமைந்திருக்கும். வங்கியியல் துறையில் உயர்ந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள ஏதுவாக அமையும்." என்றார்.

## தவணைத் தொகையில் 45% வளர்ச்சியை பதிவு செய்த ஜனசக்தி ஆயுள் காப்புறுதி



இலங்கையில் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநராகத் திகழ்ந்து வருகின்ற ஜனசக்தி ஆயுள் காப்புறுதி நிறுவனம், 2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் மகத்தான நிதிப் பெறுபேறுகள் குறித்து மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. பல்வேறு முக்கிய பெறுபேறுகள் குறிகாட்டிகள் மத்தியில் சாதனை வளர்ச்சியை நிறுவனம் அடையப்பெற்றுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மொத்த வரையப்பட்ட தவணைத் தொகை (Gross Written Premium GWP) 45% என்ற குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. நிறுவனத்தின் சீரான வளர்ச்சி மற்றும் விரிவடைத்து வருகின்ற அதன் வாடிக்கையாளர் தளம் ஆகியவற்றை மேற்குறிப்பிட்டப்பட கணிசமான வளர்ச்சி பிரதிபலிக்கின்றது.

போற்றத்தக்க அளவிலான GWP வளர்ச்சிக்குப் புறம்பாக, கடந்த ஆண்டிலிருந்து இந்த ஆண்டில் 111% என்ற எழுச்சியுடன், ஏனைய தொழிற்பாட்டு வருமானத்திலும் ஜனசக்தி ஆயுள் காப்புறுதி நிறுவனம் கணிசமான அதிகரிப்பைப் பதிவாக்கியுள்ளது. நிறுவனத்தின் சந்தை மூலதனமாக்கமும் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 43% ஆல் அதிகரித்துள்ளது. நிறுவனத்தின் மூலோபாய முதலீடுகள், பன்முகப்படுத்தப்பட்ட வருமான மார்க்கங்கள் மற்றும் தொடர்ச்சியான முதலீட்டாளர் நம்பிக்கை ஆகியவற்றை இச்சாதனைகள் காண்பிக்கின்றன.

மேலும், முதல் இரு காலாண்டுகளில், தனது காப்புறுதிதாரர்களுக்கு மிகவும் முக்கியமான தருணங்களில் இழப்பீடுகளை உரிய முறையில் வழங்கும் உறுதிமொழிக்கு அமைவாக, வாடிக்கையாளர்கள் மீதான கடப்பாடுகள் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில், ரூபா 2.2 பில்லியனுக்கும் மேற்பட்ட தொகையை ஜனசக்தி ஆயுள் காப்புறுதி நிறுவனம் இழப்பீட்டுக் கோரல்களாக செலுத்தியுள்ளது. ரூபா 3 பில்லியன் தொகையை தனது பங்கிலாபமாக நிறுவனம் வழங்கியுள்ளமை அதன் வலுவான நிதி நிலைமை மற்றும் முதலீட்டாளர்கள், தொடர்புபட்ட ஏனைய அனைத்து தரப்பினருக்கும் வெகுமதியளிப்பதில் அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் காண்பிக்கின்றது.

"வாழ்வுகளை மேம்படுத்தி, கனவுகளுக்கு வலுவூட்டுதல்" என்ற தனது நிறுவன நோக்கத்தை உண்மையாக கடைப்பிடித்து, நெறிமுறை ரீதியாகவும் மற்றும் வெளிப்படைத்தன்மையுடனும் தன்னுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருக்கும் மகத்தான மதிப்பை வழங்கும் முயற்சிகளை ஜனசக்தி ஆயுள் காப்புறுதி நிறுவனம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளது.

வாடிக்கையாளர்கள் தரப்பை எடுத்துக்கொண்டால், புத்தாக்கமான காப்புறுதித் தீர்வுகள் மற்றும் அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பரிணாம மாற்றம் காண்கின்ற தேவைகளை நிறைவேற்றும் சேவைகள் ஆகியவற்றினூடாக இந்த காப்புறுதி நிறுவனம் தனது நோக்கத்தை உயிர்ப்பிக்கின்றது. இந்த நோக்கத்தை ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நீட்டிக்கும் வகையில், பரந்தளவில் சமூகத்தில் அதன் நிலைபேற்றியலுக்கு மகத்தான பங்களிப்பை வழங்குவதிலும் ஜனசக்தி ஆயுள் காப்புறுதி நிறுவனம் பெரும் பற்றுறுதியுடன் இயங்கி வருகின்றது.

## சிறந்த தொழில்நுட்ப உட்கட்டமைப்புக்காக SLT உடன் கூட்டாண்மை ஏற்படுத்தும் DFCC



DFCC வங்கி, தனது தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்காக, ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துடன் (SLT) கூட்டாண்மையொன்றை ஏற்படுத்தி, தனது டிஜிட்டல் பரிமாண மாற்றத்திற்கான பயணத்தில் மற்றுமொரு முக்கியமான அடியை முன்னெடுத்து வைத்துள்ளது. SLT இன் இன்ரநெட் தரவு மையத்தில் (Internet Data Centre IDC) இணை அமைவிட சேவைகளை (Colocation) நடைமுறைப்படுத்தல் மற்றும் அனைத்து கிளைகள் மத்தியிலும் Cisco SDWAN தொழில்நுட்பத்தை ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை இந்த மூலோபாய கூட்டாண்மை உள்ளடக்கியுள்ளதுடன், சேவை வழங்கல் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை உச்சப்படுத்துகின்றது. வங்கியின் சேர்வர்கள் (Server) அனைத்தும் SLT இன் IDC இல் பாதுகாப்பாக பேணப்படுவதற்கு Colocation இடமளிப்பதுடன், கிளை வலையமைப்பின் மத்தியில் இன்ரநெட் இணைப்புத்திறனை மேம்படுத்துவதற்கு உதவுகின்ற ஒரு தொழில்நுட்பமாக SDWAN காணப்படுகின்றது.

DFCC வங்கியின் சிரேஷ்ட உப தலைவரும், பிரதம தகவல் அதிகாரியுமான விந்திய சொலங்காராச்சி அவர்கள் இது குறித்து கருத்து வெளியிடுகையில், "DFCC வங்கியின் டிஜிட்டல் பரிமாண வளர்ச்சியை முன்னெடுப்பதில் SLT உடனான எமது கூட்டாண்மை மற்றும் Cisco SDWAN தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தல் ஆகியன மிகவும் முக்கியமானவை. எமது தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை எதிர்காலத்திற்கு ஏற்றவாறான ஒன்றாக மாற்றியமைத்து, தொழிற்பாட்டு திறனை கணிசமான அளவில் மேம்படுத்துவதில், சர்வதேச தொழில்நுட்பத்தின் பக்கபலத்தைக் கொண்ட உள்நாட்டு நிபுணத்துவத்தின் அனுகூலத்தைப் பயன்படுத்திக்கொள்வதில் பெருமை அடைகின்றோம்.

தொழில்நுட்பத்தால் முன்னெடுக்கப்படுகின்ற தீர்வுகளில் நாம் தொடர்ந்தும் முன்னிலை வகித்து வருகின்ற நிலையில், அதியுயர் மட்ட சேவைகளை எமது வாடிக்கையாளர்கள் அனுபவிப்பதை இப்புத்தாக்க அணுகுமுறை உறுதி செய்யும்," என்று குறிப்பிட்டார்.

## நீண்ட சேவைக் கால ஊழியர்களுக்கு விருது வழங்கி கௌரவித்த Ocean Lanka





இலங்கையிலுள்ள முன்னணி நெசவுத் துணி உற்பத்தி நிறுவனமான Ocean Lanka (Pvt) Ltd, அண்மையில் இடம்பெற்ற பெருமைக்குரிய "Sewa Abhiman" Loyalty Awards ("சேவா அபிமன்" விசுவாச விருதுகள்) விழாவில் தனது ஊழியர்களின் உறுதியான அர்ப்பணிப்பை கௌரவித்துக் கொண்டாடியது. மாலபேயில் உள்ள ரீஜண்ட் கன்ட்ரி கிளப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 10 மற்றும் 20 வருடங்களாக நிறுவனத்தில் தொடர்ச்சியாக சேவையாற்றி வரும் ஓஷன் லங்காவின் பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகளுக்கு கௌரவமளிக்கப்பட்டது.

இவ்வருடம் இடம்பெற்ற விழாவில் மொத்தமாக 57 பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதில் 23 பேர் தமது 10 வருட சேவைக்காகவும், 34 பேர் தமது 20 வருட கால பணிக்காகவும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்த மைல்கல்லானது, தனது பணியாளர்களிடையே Ocean Lanka வளர்த்து வரும் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை எடுத்துக் காட்டுகிறது. ஒரு சாதகமான மற்றும் பலனளிக்கும் பணிச்சூழலை ஏற்படுத்துவதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது.

ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கு தனது நன்றியைத் தெரிவித்த Ocean Lanka (Pvt) Ltd. முகாமைத்துவப் பணிப்பாளர் Dr. Austin Au : "எமது குழுவின் உறுப்பினர்களின் ஒப்பிட முடியாத விசுவாசத்தையும் கடின உழைப்பையும் அங்கீகரிப்பதில் நாம் மிகவும் பெருமையடைகிறோம். Ocean Lanka மீது அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பானது, எமது வெற்றிக்கு உறுதுணையாக உள்ளது.

ஒருமைப்பாடு, குழுப்பணி மற்றும் எமது நிறுவனத்தை வெளிக்காட்டும் விசேடத்துவமான இடைவிடாத நாட்டம் ஆகியவற்றின் மதிப்புகளுக்கு "சேவா அபிமன்" விருதுகள் ஒரு சான்றாகும். இந்த பெரும் மதிப்புகள், எண்ணிட முடியாத சவால்களைக் கடந்து எம்மை வழிநடத்தி, புதிய உயரங்களுக்கு எம்மை சென்றடையச் செய்துள்ளன. எமது ஊழியர்களின் விசுவாசமானது, ஓஷன் லங்காவின் இதயத்தையும் உயிர்நாடியையும் பிரதிபலிப்பதுடன், இந்த உயிரோட்டமானது தொடர்ச்சியாக எம்மை முன்னோக்கிக் கொண்டு செல்லும்.

அந்த வகையில் நாம் எதிர்காலத்தை நோக்கினால், என்ன நடக்கும் என்பதை அறிய நான் உற்சாகமாக இருக்கிறேன். நாம் ஒன்றிணைந்து தொடர்ச்சியாக புத்தாக்கங்களை உருவாக்குவோம், அதனைத் தழுவுவோம், அதன் மூலம் வளர்ச்சியடைவோம்.

# இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை விஜயம்















இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கான ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று (04) கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவருடன் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் மேலும் 8 உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர். இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் குழு மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் இவர்களை வரவேற்க கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். இவ்விஜயத்தின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், பிரதமர் ஹரினி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

### கல்வி அமைச்சின் உத்தரவையும் மீறி

## கண்டி, பாடசாலையொன்றில் மாணவிகளிடம் பணம் வசூலிப்பு

பாடசாலைகளில் பல்வேறு விழாக்களை கொண்டாடுவதற்காக பெற்றோரிடம் பணம் வசூலிக்க வேண்டாமென கல்வி அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளபோதும், கண்டி பிரதான மகளிர் உயர்தரப் பாடசாலையொன்றில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, மாணவர்களுக்கு 100 ரூபா பெறுமதியான டிக்கட் விற்பனை செய்து வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சீட்டிழுப்பின் மூலம்பெறுமதியான பரிசுகள் வழங்கப்படுமெனக் கூறி 100 ரூபாவுக்கு வாங்குமாறு மாணவிகளிடம் வகுப்பு ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக சிறுவர் தினம், ஆசிரியர் தினம் போன்ற விழாக்களை மையப்படுத்தி இவ்வாறு மாணவர்களிடம் பணம் வசூலிக்க வேண்டாமென கல்வி அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும், சில பாடசாலைகளில் பல்வேறு வழிகளில் பண சேகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் அமைச்சர் அலிசப்ரி மீண்டும் வழக்கறிஞர் தொழிலுக்கு



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி மீண்டும் வழக்கறிஞராகப் பணியாற்ற ஆரம்பித்துள்ளதாக அவர் தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். சட்டத்தரணிகள் குழுவுடன் இருக்கும் புகைப்படத்தை பதிவிட்ட அவர், “நான் இருக்கும் இடத்துக்கு திரும்பி வந்ததில் மகிழ்ச்சி” என கூறியுள்ளார்.

### குடும்ப உறுப்பினர்கள் உட்பட

## கெஹெலியவின் சொத்துக்களுக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீடிப்பு



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் பல வங்கிக் கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதிகளை இடைநிறுத்தி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மேலும் நீடிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (04) உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கமைவாக கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

முன்னதாக, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்றம், கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் 16 வங்கிக் கணக்குகள் மற்றும் 05 ஆயுள் காப்புறுதிக் காப்புறுதிகளை நேற்று வரை இடைநிறுத்த உத்தரவு பிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியாவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பரத நாட்டிய நிகழ்வு



நவராத்திரி விழாவை முன்னிட்டு இன்று (05/10/2024) பிற்பகல் 2 மணிக்கு மீனாலயா meenlaya school of the arts மாணவிகள் வழங்கும் பரத நாட்டிய நிகழ்வு நடைபெறவுள்ளது. இதை மலையக வாரிசான ஜெரோமீனா அனோஜ் நெறிப்படுத்தி வழங்கிறார். இவர் கொழும்பில் பிறந்து அங்கேயே படித்து தனது பட்ட படிப்பையும், மற்றும் பிரபல நடன ஆசிரியர்களிடம் முறையாக நடனமும் பயின்று, அரங்கேற்றம் கண்டவர். இந்நிகழ்வு, இவ் ஆசிரியரின் வழிக்காட்டலில் நடைபெறவுள்ளது. இதை கண்டு மகிழ அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது.

## MSC விளையாட்டு கழகத்தின் மென்பந்து கிரிக்கெட் போட்டி

MSC விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டியும் ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் நிகழ்வும் நாளை 2024.10.06ஆம் திகதி காலை 7 மணிக்கு வத்தளை, வெலிசறை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும். இதில், சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை MSC விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தேசபந்து அ. கிஷோகுமார் மேற்கொண்டு வருகிறார். தினகரன், தினகரன் வாரமஞ்சரியினதும் சூரியன் எப்எம்மினதும் ஊடக அனுசரணையுடன் இடம்பெறும் ஆசிரியர்கள் பலரும் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள்.



தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 ஒக்டோபர் 5 சனிக்கிழமை


## சம்பியனான நவலோக அணி



NDB வங்கியின் அனுசரணையில் நடைபெற்ற வர்த்தக நிறுவனங்களுக்கு இடையிலான டிவிஷன் – C மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் LOLC ஹோல்டிங்ஸ் அணியை 190 ஓட்டங்களால் வெற்றி கொண்ட நவலோக்க மருத்துவமனை அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

இத்தொடரின் இறுதிப் போட்டி, ப்ளூம்ஃபீல்ட் கிரிக்கெட் மைதானத்தில் (29) நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நவலோக்க மருத்துவமனை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 265 ஓட்டங்களைக் குவித்தது. 266 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பாடிய LOLC ஹோல்டிங்ஸ் அணி, எதிரணியின் பந்துவீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் 17.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 75 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து தோல்வியைத் தழுவியது.

இதன்படி, 190 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டிய நவலோக்க மருத்துவமனை அணி, இத்தொடரின் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

## ரைஸ்டார் அணி வெற்றி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



புட்சால் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாலமுனை ரைஸ்டார் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

அக்கரைப்பற்று புட்சால் அரங்கில் நேற்று முன்தினம் இரவு (3) நடைபெற்ற 5 போட்டிகளைக் கொண்ட தொடரின் முதலாவது போட்டியில் ஹிஜ்ரா புட்சால் அணியினரை ரைஸ்டார் அணியினர் 39-29 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மகளிர் டி20 உலகக் கிண்ணம்

# பாகிஸ்தானிடம் தோற்ற இலங்கை இன்று ஆஸி. அணியுடன் மோதல்



மகளிர் டி20 உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான தனது முதல் போட்டியில் 31 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த இலங்கை அணி இன்று (05) முக்கியமான போட்டியில் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்ளவுள்ளது.

மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டி ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில் ஏ குழுவில் இடம்பெற்றிருக்கும் இலங்கை மகளிர் அணி பாகிஸ்தான் அணி நிர்ணயித்த 117 ஓட்ட வெற்றி இலக்கை எட்ட முடியாமல் தோல்வியை சந்தித்தது.

ஷார்ஜாவில் நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களுக்கும் சகல விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களையே பெற்றது. அணித் தலைவி சமரி அத்தபத்துவுடன் உதேசிகா பிரபோதனி மற்றும் சுகந்திகா குமாரி தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த இலங்கை மகளிர்கள் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுக்க 20 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 85 ஓட்டங்களையே பெற்றனர். ஆரம்ப வீராங்கனை விஷ்மி குணரத்ன (20) மற்றும் நிலக்ஷிகா சில்வா (22) ஆகியோர் மத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர்.


இந்தத் தோல்வியுடன் ஏ குழுவில் பின்தங்கி இருக்கும் இலங்கை அணி இன்று ஷார்ஜாவில் பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளவுள்ளது.

பத்து அணிகள் பங்கேற்றிருக்கும் டி20 உலகக் கிண்ணத்தில் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு நடைபெற்று வரும் ஆரம்பச் சுற்றுப் போட்டியில் ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகளே அரையிறுதிக்குத் தகுதி பெறும்.

இந்நிலையில் முதல் போட்டியில் தோல்வியை சந்தித்திருக்கும் இலங்கை மகளிர் அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் இன்றைய போட்டியில் வெல்வது கட்டாயமாக அமையும்.

10 ஆண்டுகளுக்கு முன்

## ஐ.எஸ். குழு பிடித்த பெண் காசாவில் மீட்பு



ஈராக்கில் இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்.) குழுவால் 2014 ஆம் ஆண்டு கடத்திச் செல்லப்பட்ட யாசிதி பெண் ஒருவர் 21 வயதில் காசாவில் இருந்து மீட்கப்பட்டுள்ளார். ஈராக், இஸ்ரேல், ஜோர்தான் மற்றும் அமெரிக்கா மேற்கொண்ட இரகசிய நடவடிக்கை மூலமே அந்தப் பெண் மீட்கப்பட்டுள்ளார்.

ஈரான் மற்றும் சிரிய நிலப்பகுதிகளை ஐ.எஸ். குழு ஆக்கிரமித்தபோது அங்குள்ள சிறுபான்மை யாசிதி மக்கள் அடிமைகளாகப் பிடிக்கப்பட்டதோடு பலரும் கொல்லப்பட்டனர்.


அப்போது 11 வயது சிறுமியாக இருந்த இந்தப் பெண் ஐ.எஸ். குழுவால் பிடிக்கப்பட்டு பின்னர் காசாவுக்கு கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

நான்கு மாத முயற்சிக்குப் பின்னர் அந்தப் பெண் மீட்கப்பட்டதாக ஈராக் வெளியுறவு அமைச்சின் தலைமை அதிகாரி சில்வான் சிஞ்சாரி தெரிவித்துள்ளார். அமெரிக்கா மற்றும் ஜோர்தானின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

'ஈராக் திரும்பிய அந்த யுவதி அவரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார்' என்று ஈராக் வெளியுறவு அமைச்சு கடந்த வியாழனன்று கூறியது. இதில் இந்தப் பெண்ணை பிடித்து வைத்திருந்தவர் அண்மையில் கொல்லப்பட்டதை அடுத்தே அவரால் தப்பி வர முடிந்திருப்பதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டது.

இந்தப் பெண்ணுடன் ஈராக் பல மாதங்களாக தொடர்பை ஏற்படுத்திய நிலையில் அது பற்றி அமெரிக்காவிடம் தகவல் வழங்கிய நிலையிலேயே அவர் மீட்டுவரப்பட்டுள்ளார். ஈராக் மற்றும் இஸ்ரேல் இடையே எந்த ஒரு இராஜதந்திர உறவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீர் தேர்தலை வெளிநாட்டவர் பார்வை



ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற மக்களவை தேர்தலை 15 வெளிநாட்டு தூதுவர்கள் அடங்கிய உயர் மட்ட தூதுக்குழுவினர் பார்வையிட்டுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் இந்தியாவில் கடமையாற்றும் அமெரிக்கா, தென் கொரியா, மெக்சிகோ, கயானா, சோமாலியா, பனாமா, சிங்கப்பூர், நைஜீரியா, ஸ்பெயின், தென்னாப்பிரிக்கா, நோர்வே, தன்சானியா, ருவாண்டா, அல்ஜீரியா, பிலிப்பைன்ஸ் ஆகிய 15 நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட தூதர்கள் இத்தேர்தல் அவதானிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரில் வாக்களிப்பு இடம்பெற்ற பல பிரதேசங்களுக்கும் வாக்களிப்பு நிலையங்களுக்கும் இக்குழுவினர் நேரில் சென்று அவதானிப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

# லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் இதுவரை இல்லாத பாரிய 'குண்டு மழை'

## சிரிய–லெபனான் பிரதான வீதியும் துண்டிப்பு



லெபனான் தலைநகரின் தெற்கு புறநகர் பகுதியில் இஸ்ரேலின் தாக்குதல்களால் பாரிய வெடிப்புகளுடன், இரவு வானெங்கும் பெரும் தீப்பிளம்புகளுடன் கரும்புகை வெளிவந்தது.

கடந்த வியாழக்கிழமை (03) இரவு முழுவதும் இடம்பெற்ற இந்தத் தாக்குதல்கள் இதுவரை இல்லாத அளவுக்கு மிகத் தீவிரமாக இருந்ததாகவும் கார் ஆலாரங்கள் ஒலிக்க ஆரம்பித்ததாகவும் கட்டடங்கள் அதிர்ந்ததாகவும் பெய்ரூட் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன்போது இஸ்ரேலியப் போர் விமானங்கள் சர்வதேச விமானநிலையத்தின் சுற்றுப்பகுதிகள் உட்பட மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் மீது சரமாரித் தாக்குதல்களை நடத்தியது.

இஸ்ரேலியப் படை தொடர்ச்சியாக 11 தடவைகள் தாக்குதல்களை நடத்தியதாகவும் பெய்ரூட்டில் இதுவரை இடம்பெற்ற அதிக தீவிரமான தாக்குதலாக இது இருந்ததாகவும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் எந்த விளக்கமும் அளிக்காதபோதும் கடந்த வாரம் படுகொலை செய்யப்பட்ட ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவுக்கு பதில் அந்த அமைப்பின் புதிய தலைவராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படும் ஹாஷிம் சபிதீனை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதாக இஸ்ரேல் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் உளவுத் தகவல் அடிப்படையில் பெய்ரூட் மீது நடத்திய துல்லியமான தாக்குதலில் ஹிஸ்புல்லா தொடர்பாடல் வலையமைப்பின் தலைவர் முஹமது ரஷீத் சபாகியை கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் நேற்றுக் கூறியது. சபாக்கியின் நிலை குறித்து ஹிஸ்புல்லா எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

இஸ்ரேல் இராணுவம் சிரியாவுடனான லெபனானின் மஸ்னா எல்லை மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான பிரதான வீதி துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த வீதியைப் பயன்படுத்தியே அண்மைய நாட்களில் இஸ்ரேல் தாக்குதலுக்கு அஞ்சி நூற்றுக்கணக்கான லெபனானியர்கள் சிரியாவுக்கு தப்பிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 10 நாட்களில் 300,000க்கும் அதிகமான மக்கள் லெபனானில் இருந்து சிரியாவுக்கு தப்பிச் சென்றிருப்பதாக லெபனான் அரசு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் தாக்குதலால் சிரியாவுடனான எல்லைக் கடவைக்கு அருகில் 12 அடி அகலமான பள்ளம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக லெபனானின் பொதுப் பணிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் அலி ஹமிகே ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

லெபனானுக்குள் ஆயுதங்களைக் கொண்டுவர இந்த எல்லைக்கடவை பயன்படுத்தப்படுவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது. 'ஆய்தங்கள் கடத்தப்படுவதை இஸ்ரேலிய இராணுவம் அனுமதிக்காது என்பதோடு இந்த போர் முழுவதும் செய்வது போல் படை பலத்தை பயன்படுத்துவதற்கும் தயங்காது' என்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் அவிசாய் அட்ராயி எக்ஸ் சமூகதளத்தில் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய தாக்குதல்களால் வீடுகளை விட்டு வெளியேறி வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழலில் லெபனானில் உள்ள சுமார் 900 தற்காலிக முகாம்களும் கிட்டத்தட்ட நிரம்பி இருப்பதாகவும் மக்கள் வெட்ட வெளிகளில் உறங்கும் நிலை அதிகரித்திருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான நிறுவன அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

இந்நிலையில் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி நேற்று பெய்ரூட் நகரை வந்தடைந்தார். விமானநிலைய சுற்றுப்புறத்தின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்திய சில மணி நேரத்திலேயே அவர் அங்கு சென்றுள்ளார்.

லெபனான் தலைநகர் பெய்ரூட் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகள் மீது இஸ்ரேல் தொடர்ந்து உக்கிர தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் 1,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பொது சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெற்கு லெபனானில் இஸ்ரேல் மட்டுப்படுத்தப்பட்ட தரைவழி நடவடிக்கையை மேற்கொள்வதாக குறிப்பிடும் நிலையில் ஹிஸ்புல்லா போராளிகள் அங்கு தமது நிலைகளை தக்கவைத்து வருகின்றனர்.

இதன்போது இரு தரப்புக்கும் இடையே நேரடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

தெற்கு லெபனானில் மேலும் 20 சிறு நகரங்களில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் நேற்று புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்த நிலையில் அது தனது தரைவழி நடவடிக்கையை விரிவுபடுத்த வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வடக்கு இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்யவே தரைவழி படை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இஸ்ரேல் நியாயப்படுத்துகிறது.

## அலி கமேனி உறுதி



ஈரான் மற்றும் தமது கூட்டணியினர் இஸ்ரேலிடம் இருந்து பின்வாங்கப்போவதில்லை என்று ஈரான் உயர்மட்டத் தலைவர் ஆயதொல்ல அலி கமேனி தெரிவித்துள்ளார். லெபனான் மீதான இஸ்ரேல் தாக்குதல் தொடரும் நிலையில் அவர் நிகழ்த்திய உரை ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

'எமது படையினர் சில இரவுகளுக்கு முன்னர் சிறப்பாக செயற்பட்ட நடவடிக்கை முழுமையாக சட்டபூர்வமானது மற்றும் முறையானதாகும்' என்று டெஹ்ரானில் நேற்று வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்னர் நிகழ்த்திய அரிதான உரையில் கமேனி குறிப்பிட்டார். இதில் இஸ்ரேல் மீது கடந்த செவ்வாய்க்கிழமை ஈரான் நடத்திய ஏவுகணை தாக்குதல்கள் தொடர்பிலேயே அவர் குறிப்பிட்டுக் கூறினார்.

இதற்கு இஸ்ரேலின் பதிலடியில் ஈரானின் எண்ணெய் நிலைகளும் உள்ளடங்கக் கூடும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன்தினம் குறிப்பிட்டிருந்தார்.

'தலைவர்கள் கொல்லப்பட்டாலும் கூட பிராந்தியத்தில் எதிர்ப்புப் போராட்டம் பின்வாங்காது' என்று கமேனி வலியுறுத்தினார்.

## இஸ்ரேலின் மேற்குக் கரை தாக்குதலில் 18 பேர் பலி




ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள துல்கரம் அகதி முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய உள்ளக பாதுகாப்பு சேவையான ஷின் பெட்டுடன் ஒருங்கிணைந்து நேற்று முன்தினம் (03) இரவு இந்தத் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது. துல்கரமில் உள்ள ஹமாஸ் உட்கட்டமைப்பு மீதே தாக்குதல் நடத்தியதாக அது கூறியது.

எனினும் பல பொதுமக்கள் கூடியிருந்த தேனீர் கடை ஒன்றின் மீதே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன அதிகாரசபையால் நடத்தப்படும் வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. இதனால் பலரும் காயமடைந்திருப்பதாக அந்த செய்தி நிறுவனம் கூறியது. இந்தத் தாக்குதலில் முஹமது அபூ சஹ்ரா, அவரது மனைவி மற்றும் இரு குழந்தைகள் என ஒரே குடும்பத்தின் நால்வர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்திகள் தெரிவித்துள்ளன.

காசாவில் கடந்த ஆண்டு ஒக்டோபரில்போர்வெடித்ததுதொடக்கம் மேற்குக் கரையில் பதற்றம் நீடித்து வருகிறது. அது தொடக்கம் இஸ்ரேல் இராணுவம் இங்கு சுற்றிவளைப்புகளைத் தீவிரப்படுத்தியது நிலையில் 700க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காசா பலி 41,802 ஆக உயர்வு



காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,802 ஆக அதிகரித்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் மேலும் 14 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 50 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று உறுதி செய்தது.

குறிப்பாக நேற்றுக் காலை டெயர் அல் பலா பகுதியில் அபூ முஹமது குடும்பத்திற்குச் சொந்தமான வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். இதில் பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.